தினமலர்
நிறுவனர் : டி. வி. ராமசுப்பையர்

# பூக்கள் விலை ஒரே நாளில் ரூ.150 வரை உயர்வு

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,00:10 IST

கோயம்பேடு : முகூர்த்த நாளையொட்டி, கோயம்பேடு மார்க்கெட்டில் பூக்கள் விலை நேற்று திடீரென உயர்ந்ததால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்தனர்.கோயம்பேடு மார்க்கெட்டிற்கு திருவள்ளூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. ஒவ்வொரு நாளும், வரத்து மற்றும் பண்டிகை காலத்தை பொறுத்து விலை நிர்ணயிக்கப்படும்.திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் மற்ற நாட்களைவிட பூக்கள் விலை கூடுதலாக இருக்கும். செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் கோவில்கள், வீடுகளில் பூஜைக்காக பூக்கள் அதிகம் பயன்படுத்துவதே இதற்கு காரணம்.இது மட்டுமின்றி சுபமுகூர்த்தம், பண்டிகை உள்ளிட்ட விஷேச நாட்களிலும் பூக்கள் கூடுதல் விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால், சில நாட்களை தவிர மற்ற நாட்களில், விவசாயிகளிடம் ஒரே விலை நிர்ணயம் செய்து, பூக்களை வியாபாரிகள் வாங்கி விற்று லாபம் பார்க்கின்றனர்.இதனால், பூக்களை விளைவிக்கும் விவசாயிகள் எதிர்பார்த்த அளவிற்கு லாபம் கிடைக்காமல் மிகுந்த ஏமாற்றத்திற்கு ஆளாகியுள்ளனர். வியாபாரிகள் சில நாட்களில் அதிக லாபம் கிடைக்காவிட்டாலும், நஷ்டத்திற்கு ஆளாகாமல் தப்பி விடுகின்றனர்.இன்று, முகூர்த்த நாள் என்பதால், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் திருமணம், கிரகப்பிரவேசம் உள்ளிட்ட விஷேச நிகழ்ச்சிகள் அதிகளவில் நடக்கிறது. இதை காரணமாக வைத்து, நேற்று கோயம்பேடு மார்க்கெட்டில் பூக்கள் அதிரடியாக விலை உயர்த்தி விற்பனை செய்யப்பட்டன.நேற்று முன்தினம் கிலோ 250 முதல் 300 ரூபாய் வரை விற்கப்பட்ட ஒரு கிலோ மல்லிகை பூ, நேற்று 300 முதல் 450 ரூபாய் வரை விற்கப்பட்டது. இதேபோல 240 முதல் 250 ரூபாய் வரை விற்கப்பட்ட ஜாதிமல்லி, 300 ரூபாய்க்கு எகிறியது.குயின்

ரோஜாப்பூ கிலோ 50 முதல் 60 ரூபாய்க்கும், கனகாம்பரம் 300 முதல் 400 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. ஒரே நாளில் பூக்கள் விலை கிலோவிற்கு 150 ரூபாய் வரை உயர்ந்ததால் பொதுமக்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர்.திருமணம் உள்ளிட்ட விசேஷ நிகழ்ச்சிக்காக வீட்டிற்கு தேவையான பூக்கள் வாங்க மார்க்கெட்டிற்கு வந்த பெண்கள், விலையை கேட்டு கண்ணீர் வராத குறையாக அதிர்ச்சியுடன் அவற்றை வாங்கி சென்றனர்.

**பயிர் சுகாதாரத்தில் முதுநிலை பட்டயம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 18,2010,02:03 IST

சென்னை : பயிர் பாதுகாப்பு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திடும் வகையில், கோவை வேளாண் பல்கலைக்கழகமும், மத்திய வேளாண் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய பயிர் சுகாதார மேலாண்மை நிறுவனமும் இணைந்து, பயிர் சுகாதாரத்தில் முதுநிலைப் பட்டயம் வழங்க முடிவு செய்துள்ளன.இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழக அரசின் வேளாண்மைத் துறை செயலர் ராமமோகன ராவ் முன்னிலையில், தலைமைச் செயலகத்தில் நேற்று நடந்தது.இந்நிகழ்ச்சியில், வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி, தேசிய பயிர் சுகாதார மேலாண்மை நிறுவன இயக்குனர் சத்யகோபால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**மதுராந்தகம் ஏரி நிரம்பியது விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,23:59 IST

மதுராந்தகம் : மதுராந்தகம் ஏரி நிரம்பி வழிவது, விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஏரிகளில் குறிப்பிடத்தக்கது மதுராந்தகம் ஏரி. இதன் மொத்தக் கொள்ளளவு 609 மில்லியன் கன அடி. ஆழம் 21.3 அடி. கரையின் நீளம் 12 ஆயிரத்து 960 அடி. ஐந்து மதகுகள் உள்ளன.திருவண்ணாமலை மாவட்டம் கிளியாற்றிலிருந்து வரும் நீர் மற்றும் நெல்வாய் மடுவு பகுதியிலிருந்து வரும்

நீர், மழை நீர் ஆகியவற்றால் ஏரி நிரம்புகிறது. ஏரி நீரைப் பயன்படுத்தி 2 ஆயிரத்து 853 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் நடைபெறுகிறது. மதுராந்தகம், கருங்குழி, மாம்பாக்கம், சாத்தனூர் உட்பட 18 கிராமங்களில் ஏரி நீரை நம்பி விவசாயம் நடக்கிறது.ஆண்டுதோறும் மழைக்காலத்தில் ஏற்படும் வெள்ளப் பெருக்கின்போது ஏரி நிரம்பி வழியும். ஏரியிலிருந்து வெளியேறும் தண்ணீரை மதுராந்தகம் மற்றும் செய்யூர் பகுதிக்குட்பட்ட 30 ஏரிகளுக்கு கொண்டு செல்ல 25 ஆண்டுகளுக்கு முன்பு 33 கி.மீ., நீளத்திற்கு உயர்மட்டக் கால்வாய் கட்டப்பட்டது. இதன் மூலம் 4 ஆயிரத்து 608 ஏக்கர் நஞ்சை நிலம் பாசன வசதி பெற்றது. தற்போது ஏரி நிரம்பி வழிகிறது. ஏரிக்கு வினாடிக்கு 100 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அதேபோல் 100 கனஅடி நீர் வெளியேறுகிறது. ஏரியிலிருந்து வெளியேறும் நீர் ஈசூர் அணைகட்டுக்கு சென்று பல்வன்குளம் ஏரி, கல்குளம் ஏரிக்கு செல்கிறது. தொடர்ந்து ஏரியை கண்காணித்து வருகிறோம் என பொதுபணித்துறை உதவி செயற்பொறியாளர் ஜெகராஜ் தெரிவித்தார்.

**வண்ணமயமான வெட்டுக்கிளிகள்: புறநகர் பகுதிகளில் படையெடுப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,00:19 IST

தாம்பரம் : பல வண்ணங்களுடன் கூடிய, "பெயிண்டட் கிராஸ் ஹாப்பர்' என்ற வெட்டுக்கிளிகள் தற்போது தென்சென்னை புறநகர் பகுதிகளில் ஏராளமான அளவில் காணப்படுகின்றன.

உலகில் 18 ஆயிரம் வகையான வெட்டுக்கிளிகள் உள்ளன. இவை எந்த விதமான தட்ப வெப்பநிலைகளிலும் உயிர் வாழும். இதன் உடலில் உள்ள வண்ணங்கள் காரணமாக, எளிதில் இவற்றை பறவைகளால் அடையாளம் காண முடியாது.வண்ண வெட்டுக்கிளிகளின் இனப்பெருக்க காலம் மே முதல் ஜூன் மாதம் வரை. இவை மஞ்சள், கறுப்பு, ஆரஞ்சு, வெள்ளை ஆகிய நிறங்களில் காணப்படும்.வண்ண வெட்டுக்கிளிகள், அமெரிக்காவின் மேற்கு பகுதியில் அதிகமாக காணப்படு கின்றன.பெரிய வெட்டுக்கிளியின் நீளம் அதிகபட்சமாக 11 செ.மீ., இருக்கும். இவை தாவர உண்ணியாகும்.வெட்டுக்கிளிக்கு வெளி காதுமடல் கிடையாது. "டிம்பானம்' என்ற செவிப்பறை மூலம் சத்தத்தைக் கேட்கிறது. பெரும்பாலானவற்றிற்கு இரண்டு ஜோடி

இறக்கைகளும், ஐந்து கண்களும் கொண்டவை.மழைக்காலத்தின் போது, பெண் வெட்டுக்கிளி முட்டைகளை இட்டு, அதை பாதுகாக்க அதன் மீது திரவ வடிவ உறையை ஏற்படுத்திவிடும். முட்டையில் இருந்து வெளிவரும் சிறிய உயிரினம், 40 முதல் 60 நாட்களில் முழு வளர்ச்சி அடையும்.சில வெட்டுக்கிளிகள் இறக்கைகள் மூலம் இசையை எழுப்பும். சில வெட்டுக்கிளிகள் பின்புறமுள்ள கால்களால் இறக்கையை தேய்த்து ஓசை எழுப்பும்.வெட்டுக்கிளிகள் தங்களின் எடையைப் போல் எட்டு மடங்கு எடையுள்ள தீவனம் உண்ணும். வெட்டுக்கிளிகள் கூட்டமாக படையெடுத்து வந்து பயிர்களைத் தின்று அழிக்கும் தன்மை கொண்டவை.வீடுகளுக்கு வந்து கிணறுகளை மாசுப்படுத்தும். வெட்டுக் கிளியின் மூளையில் 16 ஆயிரம் நியூரான்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.தற்போது, "பெயிண்டட் கிராஸ் ஹாப்பர்' என்ற வெட்டுக்கிளி புறநகரில் அதிக இடங்களில் காணப்படுகின்றன.பெரும்பாலும் இவற்றை எருக்கன் செடிகளில் காண முடியும்.இவை, இலைகளை உண்ணும் போது அதில் உள்ள சில வேதிப்பொருட்கள் வெட்டுக்கிளியின் உடலுக்கு செல்வதால், பறவைகள் "பெயிண்டட் கிராஸ் ஹாப்பரை' விழுங்குவதை தவிர்த்து விடுகின்றன.இதுவே, இந்த வகை வெட்டுக்கிளிகளுக்கு பாதுகாப்பாக அமைந்துள்ளது.

**வங்கிசார்ந்த பணிகளுக்கு ஆர்வம் அதிகம் : விவசாயத் துறைகளில் பணியாற்ற குறைவு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,23:57 IST

திருவள்ளூர் : படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு, தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு வழங்க, திருவள்ளூரில் நான்கு நாட்கள் நடத்தப்பட்ட மெகா சிறப்பு முகாமில், இதுவரை 12 ஆயிரம் பேர் பதிவு செய்துள்ளனர். இவர்களில், பெரும்பாலோர் வங்கி சார்ந்த துறைகளில் பணியாற்றவே அதிகம் விரும்புகின்றனர். விவசாயம் சார்ந்த துறைகளில் பணியாற்ற விரும்புவோர் எண்ணிக்கை குறைவாக இருந்தது.தமிழகத்தில் படித்து வேலையில்லாமல் இருக்கும் ஒரு லட்சம் இளைஞர்களுக்கு, தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என, முதல்வர் கருணாநிதி தனது

சுதந்திர தின உரையின்போது தெரிவித்தார். இதை அடுத்து, திருவள்ளூர் மாவட்டத்தில் இதற்கான சிறப்பு வேலை வாய்ப்பு மற்றும் தொழில் திறன் பயிற்சி முகாம் 21 ம் தேதி துவங்கியது.முகாமை, திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் டி.பி.ராஜேஷ் துவக்கி வைத்தார். இம்முகாம் நேற்று பிற்பகல் வரை நான்காவது நாளாக நடந்தது. இதில், நேற்று வரை 12 ஆயிரத்து 59 பேர் பதிவு செய்தனர். திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என 11 ஆயிரத்து 490 பேர் தங்களது பெயர், கல்வித் தகுதி ஆகியவற்றை பதிவு செய்துள்ளனர்.இவர்களில், 7,795 ஆண்களும், 3,695 பெண்களும் அடங்குவர். இதில், வங்கி சார்ந்த துறைகளில் பணியாற்றவே அதிகமானோர் விருப்பம் தெரிவித்துள்ளனர். இத்துறையில் பணியாற்ற 4,972 பேரும், தகவல் தொழில்நுட்பத் துறையில் 4,146 பேரும், ஆட்டோ சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் பணியாற்ற 3,752, மருத்துவமனை மற்றும் உடல் நலம் சம்பந்தப்பட்ட துறைகளில் பணியாற்ற 3,070, மின்சாரம் மற்றும் மின்னணு சார்ந்த துறைகளில் பணியாற்ற 2,683 பேரும் விண்ணப்பித்துள்ளனர்.இது தவிர, போக்குவரத்து துறையில் 2,596, ஜவுளித்துறையில் இரண்டாயிரம், சுற்றுலாத் துறையில் 1,524, விவசாயத் துறையில் 1,184 என விண்ணப்பித்துள்ளனர்.விண்ணப்பித்தவர்களுக்கு புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் வரும் 21 ம் தேதி திருவள்ளூர் அடுத்த திருப்பாசூரில் உள்ள ஸ்ரீவெங்கடேஸ்வரா பொறியியல் கல்லூரியில் நடக்கும் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளவேண்டும்.அங்கு விண்ணப்பத்தாரர்களில் தகுதி உடையவர்களை தனியார் நிறுவன அதிகாரிகள் தேர்வு செய்வர். தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு தங்கள் நிறுவனத்திலேயே, இலவசமாக தொழில் திறன் பயிற்சி அளித்து பணியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

### தொடர் மழையால் வேர்க்கடலை பயிர் சேதம்

பதிவு செய்த நாள் : நவம்பர் 18,2010,01:28 IST

திருத்தணி : தொடர் மழையால் வேர்க்கடலை பயிர் சேதம் அடைந்ததால் விவசாயிகள் கடும் நஷ்டத்தை சந்தித்துள்ளனர்.
கடந்த 10 நாட்களுக்கு முன்பு "ஜல்' புயலால் திருத்தணி மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் பலத்த மழை பெய்தது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து

வருகிறது.மேலும் பலத்த மழையால் விவசாய கிணறுகள், ஏரிகள் மற்றும் குட்டைகளில் ஓரளவுக்கு மழைநீர் நிரப்பியது. ஏரிகளில் தண்ணீர் இருப்பு உள்ளதால் விவசாயிகள் நெல், வேர்க்கடலை பயிர் செய்வதற்காக நிலத்தை உழுது தயார்படுத்தியிருந்தனர். பெரும்பாலான விவசாயிகள் கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு நிலத்தில் வேர்க்கடலை போட்டனர்.வேர்க்கடலை பயிர் செய்தது முதல் தொடர்ந்து மழை பெய்து வருவதால், முளைக்காமல் சேதம் அடைந்தது.இதில் பல விவசாயிகள் கடன் வாங்கி வேர்க்கடலை பயறு வாங்கி வந்து நிலத்தில் போட்டனர். நெற்பயிர் செய்த விவசாயிகள் மட்டும் தொடர் மழையால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.நிவாரணம் வழங்கப்படுமா?திருத்தணி அடுத்த வி.கே.ஆர்.புரம், கொத்தகுப்பம், சிறுகுமி, தாடூர், வி.கே.என்.கண்டிகை, டி.சி.கண்டிகை, செருக்கனூர், ராமகிருஷ்ணாபுரம், மாம்பாக்கசத்திரம் உட்பட 30 க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் செய்த வேர்க்கடலை பயிர் தொடர்மழையால் சேதம் அடைந்துள்ளது.இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சேதம் அடைந்த விவசாயிகளின் பயிர்களை நேரில் சென்று ஆய்வு செய்து உரிய நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

**விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,02:21 IST

திருவண்ணாமலை: போளூர் தாலுகா அலுவலகம் முன் கரும்பு டன்னுக்கு 3,000 வழங்க கோரி தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. சங்க தலைவர் சாமி தலைமை வகித்தார். முன்னதாக போளூர் பஸ் ஸ்டாண்டில் இருந்து துவங்கிய ஊர்வலத்தை மாநில துணை தலைவர் முல்லை துவக்கி வைத்து கோரிக்கை குறித்து பேசினார். "தரணி சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு வெட்டும் கூலியை ஏற்க கோரியும், 8.5 சதவீத பிழிதிறன் உள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வழங்க வேண்டும்' உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. மாவட்ட தலைவர் சுப்பிரமணியன், செயலாளர் ராஜேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**நெல் வயலில் திடீர் பள்ளம் கடலூரில் விவசாயிகள் அச்சம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2010,00:13 IST

கடலூர் : கடலூர் அடுத்த செம்மங்குப்பம் கிராமத்தில் நெல் பயிரிடப்பட்டுள்ள நிலத்தில் திடீரென எட்டு அடி ஆழத்திற்கு பள்ளம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.கடலூர் அடுத்த செம்மங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்தவர் வடிவேல். இவர் தற்போது சென்னையில் வசித்து வருகிறார். செம்மங்குப்பத்தில் உள்ள இவரது நிலத்தை, இவரது தம்பி சுப்பையன் பராமரித்து வருகிறார். இந்த நிலத்தில் தற்போது நெல் நடவு செய்யப்பட்டுள்ளது.இந்நிலையில் சுப்பையன் நேற்று காலை வழக்கம் போல் நிலத்திற்கு சென்று பார்த்த போது ஒரு இடத்தில் செழுமையாக வளர்ந்திருந்த நெல் நடவில் 6 அடி சுற்றளவில் பயிர்கள் காணாமல் பொட்டையாக இருந்துள்ளதை பார்த்து திடுக்கிட்டார். அருகே சென்று பார்த்த போது அந்த இடத்தில் பெரியளவில் பள்ளம் ஏற்பட்டுள்ளது தெரிந்தது. தகவல் அறிந்து விவசாயிகள் பலர் திடீர் பள்ளத்தை பார்த்தனர். அப்போது மழை பெய்து கொண்டிருந்ததால் பள்ளத்தில் தண்ணீர் தேங்கி நின்றது. அந்த பள்ளத்தில் நீளமான குச்சியை விட்டு பார்த்தில் 8 அடி ஆழத்திற்கு சென்றது.இந்த பள்ளம் எப்படி ஏற்பட்டது. எதனால் ஏற்பட்டது என்பதும் குறித்து தகவல் தெரியாமல் விவசாயிகள் குழப்பத்தில் உள்ளனர். மேலும் இதனால் விளைநிலங்களுக்கு மீண்டும் ஏதாவது பாதிப்பு ஏற்படும் என விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.

**பிளாஸ்டிக் பொருட்களால் விளை நிலங்கள் பாதிப்பு :குறைகேட்பு கூட்டத்தில் விவசாயிகள் புகார்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2010,00:10 IST

கடலூர் : ஆற்றில் குப்பைகளை கொட்ட அரசு தடை விதிக்க வேண்டும் என குறைகேட்புக் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் நேற்று வளர்ச்சி மன்ற அரங்கில் நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் நடராஜன் தலைமை தாங்கினார். வேளாண்மை இணை இயக்குனர் இளங் கோவன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) மணி உள்ளிட்டபல

பங்கேற்றனர்.கூட்டத்தில் விவசாயி வேங்கடபதி பேசும் போது, புதிய மின் இணைப்புக்கு நான்கு ஸ்டார் உள்ள மோட் டார் களை வாங்கியதற்கான ஆதாரம் இருந் தால் தான் மின் இணைப்பு பதிவு செய்யப்படும் என கூறுகின்றனர். ஆனால் இந்த மோட்டார் எந்த டீலரிடமும் தற்போது கிடைப்பதில்லை. இதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொண்டார்.இவரைத் தொடர்ந்து பேசிய விவசாயி ரவீந்திரன், சிதம்பரம் பகுதியில் மேச்சல் கால்நடைகளால் விவசாயம் பதித்து வருகிறது. முன்பு மாடுகளை அடைப்பதற்கு பட்டி இருந்தது. தற்போது அந்த இடங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. உடன் தாலுகா பகுதிகளில் பட்டியை ஏற்படுத்த வேண்டும்.தற்போது வேளாண் துறை சார்பில் கைத்தெளிப் பான் மட்டுமே வழங்கப் பட்டு வருகிறது. விசைத் தெளிப்பான, பெடல் தெளிப்பான் போன்றவற்றை வழங்கினால் முந்திரி, மா விவசாயிகளுக்கு பயனாக இருக்கும் என பேசினார்.கார்மாங்குடி வெங்கடேசன் பேசும் போது, விருத்தாசலம், பண்ருட்டி பகுதியில் நகராட்சியில் சேகரிக்கும் குப்பைகள் ஆறுகளில் கொட்டப்படுகிறது. இதனால் இதில் இருக்கும் பிளாஸ்டிக் பொருட்கள், மழைக்காலங்களில் தண்ணீரில் அடித்துச் சென்று வயல் களை வந்தடைகிறது. இதனால் விவசாயம் பாதிக் கப்படுகிறது. குப்பைகளை ஆற்றில் கொட்டுவதற்கு தடை விதிக்கவேண்டும் என கேட்டுக்கொண்டார்.பெண்ணாடம் விவசாயி பரமசிவம் பேசும் போது, பெண்ணாடம் வேளாண் அலுவலகத்தில் கலப்பு உள்ள விதை கொடுத்ததால் ஆறு மாத நெற்பயிர் இரண்டு மாதத்திலேயே பூவிட்டுள்ளது. இதனால் 15 க்கும் மேற்பட்ட கிராம விவசாயிகள் பாதிக்கப்பட் டுள்ளனர் என்றார்.

**கரும்பு சாகுபடியில் இயந்திரங்கள் விவசாய இளைஞர்களுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 18,2010,23:39 IST

கடலூர் : கரும்பு சாகுபடியில் இயந்திரங்கள் பயன்படுத்துதல் தொடர்பாக விவசாய இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இது குறித்து கடலூர் வேளாண்மை பொறியியல் துறை உபகோட்ட உதவி செயற்பொறியாளர் பாண்டியன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: கடலூர் மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் கிராமப்புற விவசாயிகள் மற்றும் இளைஞர்களுக்கு 2010-11 ம் ஆண்டிற்கான கரும்பு

சாகுபடி செய்வதில் வேளாண் கருவிகள் பயன்படுத்துவது தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளது. அதில் கரும்பு விவசாயத்திற்கு பயன்படும் கருவிகளான கரும்பின் கரணை பார் அமைத்து நடவு செய்யும் கருவி, கரும்பு தோகை துகளாக் கும் கருவி, அறுவடை இயந்திரம், பட்டை சீவி பாரில் உழவு செய்யும் கருவி, களை எடுக்கும் கருவி போன்ற இயந்திரங்களின் தொடர்பாக பயிற்சிகள், நீர் நிர்வாகம், சொட்டு நீர்பாசனம் போன்றவற்றிற்காக பயிற்சி அளிக்கப்படு கிறது.இந்த பயிற்சி 20 பேர்களுக்கு மட்டும் கடலூர் சின்னகங்கணாங்குப்பம் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் வரும் 29 ம் தேதி முதல் நடைபெறவுள்ளது. இப்பயிற்சியில் பங்கு பெற விருப்பமுள்ள 18 முதல் 40 வயதிற்குட்பட்டவர்கள் இம்மாதம் 26 ம் தேதிக்குள் கடலூர் உதவி செயற்பொறியாளரை அணுகி பெயரை பதிவு செய்து கொள்ளுமாறு கேட் டுக் கொள்ளப்படுகிறார் கள்.இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**நெற்பயிரில் நோய் தாக்குதல்: விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2010,21:11 IST

நெல்லிக்குப்பம் : அண்ணாகிராமம் வட்டாரத்தில் நெற்பயிரில் நோய் தாக்குதலால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் அடுத்த அண்ணாகிராமம் மற்றும் கடலூர் ஒன்றியங்களில் உள்ள விவசாயிகள் 17 ஆயிரம் ஏக்கர் சம்பா பருவத்திற்கு ஏற்ற வகையில் ஏடிடி 39 ரகம் அதிகளவில் பயிர் செய்துள்ளனர். கடந்த ஒரு வாரமாக பகலில் வெயில், மழை எனவும் இரவில் கடுமையான பனிப்பொழிவும் உள்ளது. வழக்கத்திற்கு மாறான சூழலாலும், கடந்த வாரம் வீசிய கடுமையான காற்றாலும் 6,500 ஏக்கருக்கும் மேல் நெற்பயிர்கள் "பாக்டீரியா இலைக்கருகல் நோய்' தாக்கப்பட் டுள்ளது.

இதில் அதிகளவாக கடலூர் அடுத்த நாணமேடு, சுப உப்பலவாடி, குண்டு உப்பலவாடி, நல்லாத்தூர் மற்றும் நெல்லிக்குப்பம் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இந்நோய் கடுமையாக தாக்கப்பட் டுள்ளது. இதனால் பயிர்கள் வளர்ச்சி குன்றி, இலைகள் காய்ந்து சுருண்டுள்ளது. பசுமையாக இருக்க வேண்டிய வயல்கள் அனைத்தும் மஞ்சள் நிறமாக மாறியுள்ளது. இதன் காரணமாக கதிர் வீரியமாக வராததால் உற்பத்தி வெகுவாக குறையும் நிலை ஏற்பட்டுள்ளது.

திடீரென நெற்பயிரை நோய் தாக்கியதால் என்ன மருந்து அடிப்பது என தெரியாமல் விவசாயிகள் குழப்பத்தில் உள்ளனர். ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு வேளாண்மை அலுவலர் பணியில் உள்ளார். அவர்கள் தினமும் தங்கள் பகுதியைச் சுற்றிப் பார்த்து விவசாயத்திற்குத் தேவையான அறிவுரை வழங்க வேண்டும். ஆனால், வேளாண்மை அதிகாரிகள் விவசாயிகளை சந்திப்பதில்லை. ஆட்கள் பற்றாக்குறை, மின்சார தட்டுப்பாடு, இடுபொருட்கள் விலையேற் றத்தால் விவசாயிகள் சிரமப்பட்டு பயிரிட்டு வருகின்றனர். இந்நிலையில் திடீரென நோய் தாக்குதல் ஏற்பட்டதால் செலவு செய்த பணமாவது கிடைக்குமா என்ற கவலையில் விவசாயிகள் உள்ளனர்.

## பருத்தி நூல் தட்டுப்பாடு இல்லை:சைமா துணைத் தலைவர் தகவல்

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,01:51 IST

சேலம்: ""தமிழகத்தில் பருத்தி நூலுக்கு தட்டுப்பாடு எதுவும் இல்லை,'' என, தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கத்தின் (சைமா) துணைத் தலைவர் தினகரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: பருத்தி நூல் தட்டுப்பாடு உள்ளது என்ற காரணத்தை கூறி பின்னலாடை மற்றும் விசைத்தறி பிரிவு சார்ந்த சில சங்கங்கள் நாளை (இன்று) ஸ்டிரைக் மேற்கொள்வதாக அறிவித்துள்ளன. தமிழகத்தை பொறுத்தவரை பருத்தி நூல் தட்டுப்பாடு என்பது அடிப்படையற்ற தவறான செய்தி. ஜவுளித்துறையின் கீழ் அமைய பெற்ற பருத்தி நூல் ஆலோசனை வாரியம், அக்டோபர் 21ல் நடந்த இரண்டாவது கூட்டத்தில் உள்நாட்டில் நடப்பாண்டுக்கு தேவையான நூல் போக மீதமுள்ள பருத்தி நூலை மட்டுமே ஏற்றுமதி செய்வதாக தெரிவித்துள்ளது. ஆரம்ப கால கையிருப்பு 85 மில்லியன் கிலோ பருத்தி நூலுடன் இறக்குமதி செய்யப்பட்ட ஐந்து மில்லியன் கிலோ பருத்தி நூலையும் சேர்த்து இந்த ஆண்டுக்கான உற்பத்தி செய்யப்பட்ட 3,460 மில்லியன் கிலோவில் உள்நாட்டு தேவைக்கு மட்டும் 2,656 மில்லியன் கிலோ ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் தற்போது கூடுதலாகவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விசைத்தறிக்காக கடந்த ஆண்டு 816 மில்லியன் கிலோ பயன்படுத்தியதை காட்டிலும் நடப்பாண்டு 913 மில்லியன் கிலோ ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இது வரையில் 423 மில்லியன் கிலோ பருத்தி நூல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதில் கழிவு பஞ்சு நூல் உற்பத்தியும், பாலியஸ்டர் பஞ்சு உற்பத்தியும் அடங்கி உள்ளது. இந்த ஆண்டு நூற்பாலை உற்பத்தி கூடுதலின் காரணமாக நூல் உற்பத்தி 3400 மில்லியன் கிலோவை தாண்டி உள்ளது. ஆண்டுக்கு ஆண்டு மூன்று லட்சம் கதிர்கள் உயர்ந்து வருகிறது. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு 1000 மில்லியன் கிலோ பருத்தி நூல் அதிகமாக உற்பத்தி செய்யப்படும். இரண்டு மாதங்களாக பருத்தி விலை 50 சதவீதத்துக்கு மேலாக உயர்ந்துவிட்ட காரணத்தால் நூல் விலை உயர்ந்துள்ளது. மத்திய அரசின் அவரசரமான பருத்தி ஏற்றுமதிக்கான அனுமதி, உலக பருத்தி சந்தையில் பருத்தி விலை அதிகரிப்பு ஆகியவற்றால் உள்நாட்டில் பருத்தி விலையில் ஏற்பட்ட உயர்வால் நூல் விலையும் உயர்ந்துள்ளது. தற்போது உள்நாட்டில் பருத்தி விளைச்சல் அதிகரித்துள்ள நிலையில் வெளிநாடுகளில் இருந்து பருத்தியின் வரத்து அதிகரித்துள்ளதால் இன்னும் சில மாதங்களில் பருத்தி விலையில் சரிவு ஏற்படும். அவ்வாறு சரிவு ஏற்படும் பட்சத்தில் நூல் விலையும் குறையும்.இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

### விதை நெல்லுக்கு தட்டுப்பாடு: நடவு பணிகளில் தடங்கல்

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,01:48 IST

ஆத்தூர்: சேலம் மாவட்டத்தில் பெய்யும் மழையை பயன்படுத்தி, விவசாயிகள் நெல் நடவு பணிகளை துவங்கியுள்ளனர். இந்நிலையில் வேளாண்மைத்துறை அலுவலகங்களில் விதை நெல் இருப்பு இல்லாததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். சேலம் மாவட்டம் ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில வாரங்களாக தொடர் மழை பெய்து வருகிறது. அதனால் ஏரி, குளம், நீரோடைகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. மேலும், வசிஷ்ட நதி, சுவேத நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால், தடுப்பணைகள், அணைக்கட்டுகள் நிறைந்து உபரிநீர் வழிந்து செல்கிறது. விவசாய கிணறுகளில் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. அதனால், ஆத்தூர் பகுதி விவசாயிகள் நெல் நடவு பணிகளை துவங்கியுள்ளனர். நெல் நடவுக்கு தேவையான விதை நெல் சம்மந்தப்பட்ட யூனியன்

வேளாண்மைத்துறை அலுவலகங்களில் இருப்பு இல்லாமல் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. நெல் நடவு பணிகளை மேற்கொள்ள முடியாமல் வயல்களை உழுது தயார் செய்த விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். தனியார் கடைகளில் விதை நெல் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆத்தூர், தலைவாசல் பகுதி விவசாயிகள் கூறியதாவது: பலத்த மழை பெய்து வருவதால் நெல் நடவு பணிகளுக்கு நிலங்களை உழுது விதைப்பு பணியில் ஈடுபட்டுள்ளோம். யூனியன் வேளாண்மை அலுவலகத்தில் விதை நெல் கிலோ 19.95 ரூபாய் நிர்ணயித்து மானியத் தொகை போக 14.95 ரூபாய்க்கு அரசு வழங்குகிறது. மேலும், தழைச்சத்து, மணிச்சத்து போன்ற உயிர் உரங்களும் விதை நெல்லுடன் வழங்கப்படுகிறது. தற்போது, வேளாண்மை அலுவலகங்களில் விதை நெல் இருப்பு இல்லாததால், தனியார் கடைகளில் கிலோ 23 முதல் 30 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர். வேளாண்மை அலுவலகத்தில் உடனடியாக விதை நெல் வழங்க வேண்டும், என்றனர்.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் உதயகுமார் கூறியதாவது: மாவட்டத்திலுள்ள 20 யூனியன்களிலுள்ள வேளாண்மை அலுவலகங்களில் ஏ.டி.டி., 45, 43, 36 மற்றும் வெள்ளை பொன்னி ஆகிய விதை நெல் விற்பனை செய்யப்படுகிறது. ஆத்தூர் வேளாண்மை அலுவலகத்தில் 40 டன், தலைவாசல் 50 டன், கெங்கவல்லி 40 டன் என மாவட்டம் முழுவதும் 400 டன் விதை நெல் அனுப்பி வைக்கப்பட்டது. வடகிழக்கு பருவ மழையை பயன்படுத்தி விவசாயிகள் நெல் நடவு பணிகளில் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர். அதனால், விதை நெல் இருப்பு இல்லாமல் விற்பனையாகியுள்ளது. தேவை அதிகரித்துள்ளதால் இம்மாத இறுதிக்குள் ஆத்தூர் பகுதிக்கு 15 டன் விதை நெல் அனுப்பி வைக்கப்படும், என்றார்.

## மாநில அளவில் ஸ்டிரைக்: பருத்தி விலை உயர்வை கண்டித்துபெடக்சில் நிர்வாகிகள் அறிவிப்பு

பதிவு செய்த நாள் : நவம்பர் 18,2010,02:11 IST

சேலம்: பருத்தி விலை உயர்வைக் கண்டித்து நாளை (19ம் தேதி) மாநிலம் தழுவிய வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபடப் போவதாக, பெடக்சில் நிர்வாகிகள்

அறிவித்துள்ளனர். விசைத்தறி வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகம் சார்பில், டிசம்பர் 4, 5 ம் தேதிகளில் கோவை கொடிசியா வளாகத்தில் உலகளாவிய வாங்குவோர்- விற்போர் சந்திப்பு நடத்தப்படுகிறது. அதற்கான விளக்க கூட்டம் சேலத்தில் நேற்று நடந்தது. அதன் ஒருங்கமைப்பு குழு தலைவர் மதிவாணன் கூறியதாவது: கோவையில் டிசம்பர் 4,5 ம் தேதிகளில் உலகளாவிய வாங்குவோர்- விற்போர் சந்திப்பு நடக்கிறது. அங்கு இடைத்தரகர்கள் இல்லாமல் ஜவுளி உற்பத்தி பொருட்களை குறைந்த விலையில வாங்கலாம். டிசம்பரில் நடக்கும் சந்திப்பில் வெளிநாடுகளில் இருந்து 150 க்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தயாரிப்பாளர்களே நேரடியாக ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற கொள்கையில்தான், பெடக்சில் இயங்கி வருகிறது. கடந்த ஒரு மாதத்தில் மட்டும் பருத்தி விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது. நம் நாட்டில் பருத்தி நூல் பற்றாக்குறையுள்ள நிலையில், வெளிநாடுகளுக்கு பருத்தி, நூல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதனால் உள்நாட்டில் பருத்தி நூல் விலை நாளுக்கு நாள் உயர்வதோடு, கைத்தறி, விசைத்தறி உரிமையாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். நூல் விலையேற்றத்தால் தீபாவளிக்கு பின், பல விசைத்தறிகள் இயங்கவில்லை. எனவே வெளிநாட்டுக்கு பருத்தி ஏற்றுமதியை தடை செய்ய வேண்டும். பருத்தி, நூல் விலை ஏற்றுமதியை தடை செய்ய கோரி, முதல்வர் கருணாநிதி மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பினார். ஒரு மாதத்துக்கு மட்டும் பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டது. வெளிநாட்டுக்கு பருத்தியை ஏற்றுமதி செய்வதால், விவசாயிகள் பயனடைவதாக மத்திய அரசு தெரிவித்து மீண்டும் பருத்தி ஏற்றுமதியை துவக்கியது. அதிக லாபத்தை எதிர்நோக்கி சில மில் உரிமையாளர்கள் பருத்தியை பதுக்கி வைத்துள்ளனர். அவர்கள் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆன்-லைன் வர்த்தகத்தின் மூலம் நூல், பருத்தி விலை நிர்ணயிப்பதை மத்திய, மாநில அரசுகள் தடை செய்ய வேண்டும். பருத்தியை அத்தியாவசிய பண்டம் சட்டங்களின் கீழ் கொண்டு வர வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, நாளை (19 ம் தேதி) இந்தியா முழுவதும் உள்ள அனைத்து விசைத்தறி கூடங்களும் இயங்காது. தமிழகத்தில் உள்ள 5 லட்சம் விசைத்தறி தொழிலாளர்களும், இந்தியா முழுவதும் 22 லட்சம் விசைத்தறி தொழிலாளர்களும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட உள்ளனர். அதனால் அன்று ஒரு நாள் மட்டும் 50

கோடி ரூபாய்க்கும் மேல் வர்த்தகம் பாதிக்கும். அதன் பின்னும் எந்த நடவடிக்கையும் எடுக்காவிட்டால், தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் அறிவிக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார். முன்னதாக நடந்த விளக்கக் கூட்டத்தில், பெடக்சில் நிர்வாக உறுப்பினர் கணேசன் வரவேற்றார். நிர்வாக உறுப்பினர் ராமசாமி, சேலம் மாவட்ட சிறு மற்றும் குறுந்தொழில் அசோசியேஷன் தலைவர் மாரியப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**"ராஜராஜன் 1000' நடவு செய்வதில் பிரச்னை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2010,01:59 IST

சேலம்: தமிழக அரசு புதியதாக அறிமுகம் செய்துள்ள "ராஜராஜன் 1000' செம்மை நெல் சாகுபடி செய்வதற்கு கூலியாட்கள் கிடைப்பதில்லை. இதை நடவு செய்ய புதிய இயந்திரம் தேவை என, விவசாயிகள் குறை தீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. அதிகாரிகள் விவசாயிகள் புதிய தொழில்நுட்பத்தை அறிந்திருக்காததால், "ராஜராஜன் 1000' சாகுபடி செய்வதில் பிரச்னை உள்ளதாக காரசார விவாதத்தில் ஈடுபட்டனர். சேலம் புதிய கலெக்டர் அலுவலகத்தில் டி.ஆர்.ஓ., கலையரசி தலைமையில் விவசாயிகள் குறை தீர் கூட்டம் நடந்தது. விவசாயிகள் குறை தீர் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்களில் பத்து நிலுவையில் உள்ளது. கடந்த கூட்டத்தில் பெறப்பட்ட 67 மனுக்களில் 60 மனுக்களுக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது. ஏழு மனுக்கள் பதில் அளிக்காமல் நிலுவையில் உள்ளது. வரும் கூட்டத்தில் விவசாயிகள் அளிக்கும் அனைத்து மனுக்களுக்கும் பதில் அளித்து, நிலுவையில் இல்லாத வகையில் அதிகாரிகள் பார்த்து கொள்ள வேண்டும் என அறிவுருத்தப்பட்டது. விவசாயி சண்முகம்: பனமரத்துப்பட்டி ஏரி தண்ணீரை அந்த பகுதி மக்கள் ஒரு சொட்டு கூட பயன்படுத்துவது கிடையாது. சேலம், ராசிபுரம் பகுதியை சேர்ந்த மக்களே பயன்படுத்தி வருகின்றனர். இதுபோன்ற சூழ்நிலையில், பனமரத்துப்பட்டி ஏரி பகுதியில் உள்ள நன்செய் நிலங்களை புன்செய் நிலங்களாக பதிவு செய்து, வரி குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். "ராஜராஜன் 1000' செம்மை நெல் சாகுபடி செய்ய கூலியாட்கள் கிடைப்பதில்லை. அவ்வாறு கூலியாட்கள் வந்தாலும், அவர்களுக்கு 3,000 ரூபாய் செலவாகிறது. "ராஜராஜன் 1000' நடவு செய்ய புதிய

இயந்திரம் கண்டு பிடித்து, விவசாயிகளுக்கு ஏற்படும் செலவினத்தை கட்டுப்படுத்த வேண்டும், என்றார்.

வேளாண் அலுவலர் ராஜதுரை: "ராஜராஜன் 1000' நடவு செய்வது குறித்து நவீன தொழில்நுட்பத்தை விவசாயிகள் அறிந்திருக்க வில்லை. இதனால், அவர்களால் நடவு செய்வதில் பிரச்னையை சந்திக்கின்றனர். ராஜராஜன் 1000 மற்ற நெல் சாகுபடி செய்வது போல அல்லாமல், மூன்று கிலோ விதை நெல்லை 22.5 செ.மீ., இடைவெளி விட்டு, ஒரு சதுர மீட்டருக்கு 11 நெல் பயிர்களை நடவு செய்ய வேண்டும். விவசாயிகள் வழக்கமான நெல் விதை போல ஏக்கருக்கு 20 கிலோ நடவு செய்வதால் கூலி உயர்வு ஏற்படுகிறது. "ராஜராஜன் 1000' ஏக்கருக்கு 3 கிலோ பயன்படுத்தினால் போதுமானது; கூலி செலவும் மிஞ்சும்," என்றார். விவசாயி சண்முகம்: இதே முறையை பின்பற்றி என் தோட்டத்தில் நடவு செய்துள்ளேன். ஆனால், ஒவ்வொரு நெல் பயிராக நடவு செய்ய கூலியாட்கள் கிடைப்பதில்லை. அவ்வாறு வந்தாலும் கூலி அதிகமாக கேட்கின்றனர். இதற்கு தகுந்த இயந்திரம் கண்டு பிடிக்க வேண்டும், என்றார். வழக்கமாக நெல் நடவுக்கு பயன்படுத்தப்படும் இயந்திரத்தின் மூலம் "ராஜராஜன் 1000' நெல் நடவு செய்ய முடியும் என்று வேளாண் அலுவலர்கள் பதில் அளித்தனர். விவசாயி கோவிந்தராஜ்: சேலம் விவசாயிகளின் பிரதான பயிராக மரவள்ளி உள்ளது. இதில் ஏற்படும் மாவு பூச்சியை கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏற்கனவே, மழை வந்தால் சப்பாத்தி பூச்சி அழிந்து விடும் என விவசாயிகள் குறை தீர் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், மூன்று மாத பயிர்களில் கூட சப்பாத்தி பூச்சி தாக்குதல் உள்ளதால், விவசாயிகள் பெரும் அவதி அடைந்து வருகின்றனர். கரியகோவில் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடுவதன் மூலம் பெத்தநாயக்கன்பாளைம் பகுதியில் உள்ள விவசாயிகள் பயிர் சாகுபடி செய்ய ஏதுவாக இருக்கும், என்றார். விவசாயி பெருமாள்: இடைத்தரகர்கள் விவசாயிகள் தானியங்களை பெற்று, அதிக லாபம் சம்பாதித்து வருகின்றனர். விவசாய பொருட்கள் விளைவிப்பவர்களுக்கும், ஆலை அதிபர்களுக்கும் இடைய உள்ள புரோக்கரால் விவசாயிகள் வருவாய் இழப்புக்கு உள்ளாகின்றனர். எனவே, அரசே விவசாய பொருள்களுக்கு தானிய கிடங்கு அமைத்து, விலை நிர்ணயம் செய்து பொருளை கொள்முதல் செய்வதன் மூலம் புரோக்கர்கள்

தலையீட்டை தவிர்க்க முடியும். குஜராத்தில் கலர் பருத்தியை மகளிர் குழுவினர் பயிரிட்டு சாதனை செய்துள்ளனர். அதேபோல, தமிழக விவசாயிகள் கலர் பருத்தியை பயிரிடும் தொழில்நுட்பத்தை அறிய அரசு நடவடிக்கை எடுத்து, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் குறை தீர் கூட்டத்தில் விவாதம் நடந்தது. விவசாயிகள் அளித்த மனுக்களை அதிகாரிகள் பெற்று கொண்டனர்.

**கழிச்சல் நோயால் ஆடுகள் பலி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2010,02:04 IST

பனமரத்துப்பட்டி: சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி பகுதியில் விவசாயிகள் உப தொழிலாக நாட்டுக்கோழி, ஆடு, கறவை மாடுகள் வளர்த்து வருகின்றனர். சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால் ஜில் என்று குளிர் காற்று வீசுகிறது. குளிர்காற்று, மழை, வெயில் மாறி வருவதால் பருவ நிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் ஆடு, மாடுகள் மேய்ச்சல் இடங்களில் சேறும் சகதியுமாக மழை நீர் தேங்கி உள்ளது. அந்த இடத்தில் உள்ள கழிவு நீர் கலந்த மழை நீரை ஆடுகள் குடிப்பதால், பல்வேறு நோய்கள் தாக்குகின்றன. சில நாட்களாக ஆடுகளுக்கு தொடர்ந்து வயிற்று போக்கு (கழிச்சல் நோய்) ஏற்பட்டு, உணவு எடுக்காமல், நடக்கவும் முடியாமல், ஒரே இடத்தில் சுருண்டு படுத்து கிடக்கின்றன. பச்சை நிறத்தில் தண்ணீர் போல் மலம் கழிப்பதால், அந்த இடத்தில் வீக்கம் ஏற்பட்டு, கொப்புளம் தோன்றி உள்ளது. மழை மற்றும் குளிர் காற்றை சுவாசிக்கும் ஆடுகளுக்கு சளி, காய்ச்சல் நோய் தாக்கி உள்ளது. கழிச்சல் நோய், சளி, காய்ச்சல் தாக்கிய ஆடுகள் மூன்று நாட்களுக்கு மேல் தாக்குபிடிக்க முடியாமல் செத்து மடிகின்றன. சளி,காய்ச்சல் ஏற்பட்ட கறவை மாடுகள் பால் சுறப்பதை குறைத்து விடுகின்றன.பனமரத்துப்பட்டி சந்தைபேட்டையை சேர்ந்த விவசாயி சங்கரின் பத்துக்கும் மேற்பட்ட ஆடுகள் தொடர் கழிச்சல், சளி, காய்ச்சல் நோயால் செத்து மடிந்தன. 14 வது வார்டு, களரம்பட்டி, நல்லியாம்புதூர், பெரமனூர், கோம்பைக்காடு உள்ளிட்ட இடங்களில் பரவலாக ஆடு செத்து மடிந்தன. நோய் தாக்கிய ஆடு, மாடுகளை காப்பாற்ற சிகிச்சை அளிக்க கால்நடை மருத்துவமனைக்கு விவசாயிகள் படையெடுத்து

வருகின்றனர். பனமரத்துப்பட்டி கால்நடை மருத்துவமனையில் நோய் தாக்கிய ஆடு, மாடுகளுக்கு தடுப்பூசி, மருந்து, குளுக்கோஸ் போடப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும் நோய் தாக்கி ஆடு, மாடுகளின் ரத்த மாதிரி எடுக்கப்பட்டு, சேலத்தில் உள்ள பரிசோதனை கூடத்திற்கு அனுப்பபடுகிறது. பனமரத்துப்பட்டி கால்நடை மருத்துவர் கூறியதாவது: மழையினால் புதியதாக முளைக்கும் கொளுந்து புல், நுனி புல் சாப்பிடும் ஆடுகளுக்கு கழிச்சல் ஏற்படும். தொடர்ந்து கழிச்சல் ஏற்படுவதால், நீர் சத்து குறைந்து இறக்க வாய்ப்பு உள்ளது. அதனால் கழிச்சல் ஏற்படும் ஆடுகளுக்கு நிறைய தண்ணீர் கொடுக்க வேண்டும். மழையில் நனைவதாலும், குளிர் காற்று வீசுவதால் ஆடுகளுக்கு சளி பிடிக்கிறது. சளி அதிகரித்து மூச்சு திணறல் ஏற்பட்டு இறக்க வாய்ப்பு உண்டு. ஆடுகளுக்கு 38.8 சென்டி கிரேடு மேல் வெப்பம் அதிகரித்தால் காய்ச்சல் ஏற்படும். ஆடு, மாடுகளை மழையில் நனையவிடாமல், தாது சத்துகள் நிறைந்த உணவுகளை அதற்கு கொடுக்க வேண்டும்.நோய் தாக்கிய ஆடு, மாடுகளுக்கு கால்நடை மருத்துவமனையில் இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுகிறது. கழிச்சல் நோய், சளி, காய்ச்சல் தாக்கிய ஆடு, மாடுகளுக்கு தாங்களே சிகிச்சை அளிக்காமல், உடனடியாக கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு வந்து சிகிச்சை அளிக்க வேண்டும், என்றார்.

**தனியார் உரக்கடைகளில் சோதனை :8 கடைகளில் விற்பனைக்கு தடை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,01:45 IST

ஆத்தூர்: சேலம், ஆத்தூர் பகுதியில் கூடுதல் விலைக்கு உரம் விற்பனை செய்த, எட்டு தனியார் உரக்கடைகளில் உரம் விற்பனை செய்ய வேளாண்மைத்துறை தற்காலிக தடை விதித்துள்ளது. தனியார் கடைகளில் உரங்களை பதுக்கி வைத்து வெளிமாவட்டங்களுக்கு டன் கணக்கில் விற்பனை செய்வதாகவும், கூடுதல் விலைக்கு விற்பதாகவும் அரசுக்கு புகார் சென்றது. கூடுதல் விலைக்கு உரம் விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி வேளாண்துறை அதிகாரிகளுக்கு அரசு உத்தரவிட்டது. சேலம் மாவட்டத்தில் வேளாண்மை இணை இயக்குனர் உதயகுமார் தலைமையிலான வேளாண்மை அலுவலர்கள், உரம் விற்பனை பறக்கும் படை அலுவலர்கள் ஆத்தூர், வாழப்பாடி, தலைவாசல், சேலம் பகுதிகளில் "திடீர்' ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின்போது,

ஆத்தூர் நகர பகுதியிலுள்ள தனியார் உரக்கடைகளில் கூடுதல் விலைக்கு உரம் விற்பனை செய்தது தெரிந்தது. அதையடுத்து சம்மந்தப்பட்ட மூன்று கடைகளில் உரம் விற்பனை செய்ய தற்காலிக தடை விதிக்கப்பட்டது. சேலம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் உதயகுமார் கூறியதாவது: வடகிழக்கு பருவ மழை பெய்து வருவதால் நெல் நடவு உள்ளிட்ட விவசாய பணிகள் அதிகரித்துள்ளது. விவசாயிகளுக்கு உரம் அதிகளவில் தேவை என்பதால் நிர்ணயம் செய்த அளவுக்கு மேல் உரம் விற்பனை செய்ய கூடாது என தனியார் உர விற்பனையாளர்களுக்கு எச்சரிக்கப்பட்டுள்ளது. தற்போது யூரியா 3,450 டன், அம்மோனியா சல்பேட் 145 டன், டி.ஏ.பி., 1,030 டன், சூப்பர் பாஸ்பேட் 198 டன், பொட்டாஷ் 2,910 டன், 20 -20-0 காம்ப்ளக்ஸ் 2,326 டன் என 8 ஆயிரம் டன் உரம் இருப்பு உள்ளது. தனியார் உரக்கடைகளில் இருந்து விழுப்புரம், பெரம்பலூர் பகுதி விவசாயிகளுக்கு டன் கணக்கில் விற்பதால், சேலம் மாவட்ட விவசாயிகளுக்கு உரம் தட்டுப்பாடு ஏற்படுகிறது. வெளிமாவட்டங்களுக்கு உரம் விற்பனை செய்தாலோ, கூடுதல் விலைகளில் உரம் விற்பனை செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். கூடுதல் விலைக்கு உரம் விற்பனை செய்த ஆத்தூர், வாழப்பாடி, சேலம் பகுதியிலுள்ள எட்டு தனியார் உரக்கடைகளில் உரம் விற்பனை செய்வதற்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது. உரம் விற்பனை குறித்து வேளாண்மை பறக்கும்படை அலுவலர்கள் தொடர்ந்து கண்காணிப்பு பணியில் ஈடுப்பட்டு வருகின்றனர், என்றார்.

**ஒரு வாழைப்பழ சீப்பில் 62 பழங்கள் இருந்த அதிசயம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 18,2010,02:18 IST

ராசிபுரம்: ஒரே வாழைப்பழ சீப்பில் 62 பழங்கள் இருப்பதை சுற்று வட்டாரத்தை சேர்ந்த மக்கள் அதியசயத்துடன் பார்த்துச் சென்றனர். ராசிபுரம் உழவர் சந்தையில் சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் தங்களது விளை நிலத்தில் சாகுபடி செய்த காய்கறிகளை தினமும் அறுவடை செய்து விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். அதை மக்கள் தங்களது தேவைக்கேற்ப வாங்கி வந்து பயன்படுத்துவதை வாடிக்கையாக கொண்டுள்ளனர். இந்நிலையில் நேற்று ஒரு விவசாயி தங்களது தோட்டத்தில் விளைந்து

வாழத்தாரை விற்பனைக்கு கொண்டு வந்தார். அந்த வாழைத்தாரில் ஒரு சீப்பில் மட்டும் 62 வாழைப்பழங்கள் இருப்பது தெரியவந்தது. அதை பார்த்த மக்கள் வியந்தனர். ஒரே சீப்பில் அதிகப்படியான பழங்கள் இருப்பது தெரியவந்ததும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த ஏராளமான மக்கள் வந்து அதிசய வாழைப்பழ சீப்பை பார்த்துச் சென்றனர்.

**அசோலா சாகுபடி நவ.,19 ல் பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,01:59 IST

நாமக்கல்: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 19 ம் தேதி அசோலா சாகுபடி முறை மற்றும் கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தும் வழிமுறை குறித்து ஒரு நாள் பயிற்சி நடக்கிறது. திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் வெளியிட்ட அறிக்கை: வேளாண் அறிவியல் நிலையத்தில் நவம்பர் 19 ம் தேதி நடக்கும் அசோலா சாகுபடி முறை குறித்த பயிற்சியில் அசோலா ரகம், உற்பத்தி முறை, வளரிடம், அசோலாவில் உள்ள சத்துக்கள், கால்நடை மற்றும் கோழிகளுக்கு தீவனமாக அளிக்கும் முறை பற்றி பயிற்சியளிக்கப்படுகிறது. மேலும், செயல்விளக்கமும் செய்து காண்பிக்கப்படுகிறது. அந்தப் பயிற்சியில் விவசாயிகள், பண்ணையாளர், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளோர் பங்கேற்கலாம். விருப்பமுள்ளோர் மோகனூர் சாலையில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 18 ம் தேதிக்குள் நேரிலோ அல்லது 04286-266345, 266244 ஆகிய ஃபோன் எண்களிலோ தொடர்பு கொண்டு பெயர் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**துவரை செயல் விளக்கத்திடல் வேளாண் கமிஷனர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,01:56 IST

மோகனூர்: மோகனூர் யூனியனில் அமைக்கப்பட்டிருந்த துவரை செயல்விளக்கத் திடல்களை வேளாண் துறை கமிஷனர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மோகனூர் யூனியனுக்கு உட்பட்ட பகுதியில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 27 ஏக்கர் பரப்பளவில் துவரைப் பயிர் செயல்விளக்கத் திடல் சாகுபடி அமைக்கப்பட்டுள்ளது. இந்த செயல்விளக்கத் திடல் அமைத்த விவசாயிகளுக்கு விதை, உரம், உயிர் உரம் ஆகியவை

முழு மானிய விலையில் வழங்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. அந்த செயல்விளக்கத் திடல்களை சென்னை வேளாண்துறை கமிஷனர் கோசலராமன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். விவசாயி முத்துசாமி என்பவரது தோட்டப் பயிரை ஆய்வு செய்த கமிஷனர் கோசலராமன், விளைச்சல் குறித்து விரிவாகக் கேட்டறிந்தார். வேளாண் இணை இயக்குனர் பிரபாகரன், வட்டார வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ, விதைச்சான்று இயக்குனர் சுப்பிரமணியம், வேளாண் அலுவலர்கள் ஜெகதீஷன், சுதா உட்பட பலர் பங்கேற்றனர்.

**விவசாய தொழிலாளர் சங்க கூட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 18,2010,02:22 IST

நாமக்கல்: நாமக்கல் அடுத்த சிங்கிலிப்பட்டி பஞ்சாயத்து காளிநாயக்கன்பட்டி காலனியில், அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க கிளை அமைப்புக் கூட்டம் நடந்தது. சங்கத் தலைவர் ரங்கசாமி தலைமை வகித்தார். நாமக்கல் பகுதி செயலாளர் ராமசாமி, சங்கத்தின் அடிப்படை நோக்கம் குறித்து விளக்கினார். சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். அதில், தலைவராக ரங்கசாமி, உப தலைவர்களாக பழனிசாமி, சின்னபாப்பு, செயலாளராக மணி, உதவிச் செயலாளர்களாக கொண்டன், சரசு, பொருளாளராக மயிலேஸ்வரி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கன மழையால் அணை நீர் மட்டம் "கிடுகிடு' உயர்வு தர்மபுரி மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,02:27 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் கன மழை காரணமாக மாவட்டத்தில் உள்ள அணைகளில் நீர் மட்டம், "கிடுகிடு' வென உயர்ந்துள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் கடந்த 29 ம் தேதி முதல் வங்க கடலில் ஏற்பட்ட குறைந்தழுத்த தாழ்வு காரணமாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாவட்டம் முழுவதும் கன மழை பெய்ததால், மாவட்டத்தில் உள்ள நீர் ஆதாரங்கள் அனைத்திலும் நீர் மட்டம், "கிடுகிடு' வென

உயர்ந்துள்ளது. கடந்த 2005 ம் ஆண்டுக்கு பின் தற்போது பெய்த வடகிழக்கு பருவமழையால் நீர் ஆதாரங்களில் தண்ணீர் சேமிப்பு அதிகரித்து இருப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். 2005 ம் ஆண்டுக்கு பின் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை எதிர்பார்ந்த அளவு இல்லை.

மழை ஒரளவுக்கு பெய்த போதும் நீர் ஆதார வழித்தட கால்வாய்கள் ஆக்கிரமிப்பு முறையான பராமரிப்பு பணிகள் இல்லாததால் நீர் சேகரிப்பதில் பெரும் அளவில் பின்னடைவை சந்தித்தது. நேற்று முன்தினம் மாவட்டத்தின் அனைத்து பகுதியிலும் மழை பெய்திருப்பதால், அந்தந்த பகுதியில் உள்ள மழைநீர் நீர் ஆதாரங்களின் நீர் மட்டத்தை உயர்த்த உதவியாக இருந்தது. நேற்று முன்தினம் மாவட்டம் முழுவதும் 349.60 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. இது வடகிழக்கு பருவ மழை காலங்களில் பெய்யும் மொத்த அளவுக்கு சமமானது. திடீர் கன மழையால் நீர் ஆதாரங்கள் பெருகி இருப்பது வரும் நாட்களில் விவசாயம் மற்றும் குடிநீர் தேவைகளுக்கு பயன் உள்ளதாக இருக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டின் கீழ் 78 ஏரிகள் உள்ளன. இவற்றில் பாலக்கோடு தாலுகாவில் குமாரசெட்டி, ராஜபாளையம் புதூர் ஏரி, சங்கம் பசுவதலாவ், அரூர் தாலுகா பைரநாயக்கனஅள்ளி, தீர்த்தகிரி ஆகிய ஐந்து ஏரிகள் முழு அளவில் நிரம்பியுள்ளது. 73 ஏரிகளில் 50 முதல் 60 சதவீதம் நீர் நிரம்பியுள்ளது. பாப்பிரெட்டிப்பட்டி தாலுகாவில் உள்ள வாணியாறு அணை மொத்த கொள்ளவு 65 அடி. கடந்த மாதம் 46 அடி தண்ணீர் இருந்தது. நேற்றை நிலவரப்படி 63.6 அடி தண்ணீர் நிரம்பியுள்ளது. அணையில் இருந்து விநாடிக்கு 186 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

பாலக்கோடு தாலுகா சின்னாறு பஞ்சப்பள்ளி அணையின் மொத்த கொள்ளவு 50 கன அடி. கடந்த மாதம் 23 கன அடி தண்ணீர் இருந்தது. நேற்றைய நிலவரப்படி 45.4 கன அடி தண்ணீர் நிரம்பியுள்ளது. தர்மபுரி நகராட்சி பகுதியில் பஞ்சப்பள்ளி அணையில் இருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அணையின் நீர் மட்டம் ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் நிரம்பும் நிலையில் தற்போது நீர் மட்டம் உயர்ந்திருப்பது தர்மபுரி நகரப்பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தர்மபுரி தாலுகா தொப்பையாறு அணை கொள்ளவு 50 அடி கடந்த மாதம் 15 அடி தண்ணீர்

இருந்தது. நேற்றைய நிலவரப்படி 30.1 அடி தண்ணீர் நிரம்பியுள்ளது. நாகாவதி அணையின் கொள்ளவு 24.6 கன அடி. கடந்த மாதம் 2 அடி தண்ணீர் இருந்தது. நேற்று நிலவரப்படி 16 அடி தண்ணீர் உள்ளது.

கேசர்குழி அணை கொள்ளவு 25 அடி. கடந்த மாதம் 5 அடி தண்ணீர் இருந்தது. நேற்று நிலவரப்படி 15 அடி தண்ணீர் உள்ளது. பாலக்கோடு தாலுகா தும்பலஅள்ளி அணை நீர் மட்டம் 14.75 அடி. கடந்த மாதம் வரையில் தண்ணீர் இல்லை. நேற்றைய நிலவரப்படி குறைந்த அளவில் குட்டை போல் தண்ணீர் நிரம்பியுள்ளது. இந்த அணைக்கு பஞ்சப்பள்ளி சின்னாறு அணையில் இருந்து உபரிநீர் திறந்து விடப்படும் காலங்களில் அணை நீர் மட்டம் உயரும். அரூர் தாலுகா வரட்டாறு அணை நீர் மட்டம் 34.45 கன அடி. கடந்த மாதம் 17.50 கன அடி தண்ணீர் இருந்தது. நேற்றைய நிலவரப்படி 27 அடி தண்ணீர் நிரம்பியுள்ளது. கடந்த ஒரு வாரத்தில் பெய்த கன மழையை தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள அணைகளில் நீர் மட்டம் உயர்ந்திருப்பது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை கொடுத்துள்ளது.

பருத்தி, குச்சி கிழங்கு பயிர்கள் பாதிப்புதர்மபுரி மாவட்டத்தில் கடந்த மாதங்களில் நிலவிய தட்ப வெப்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு பல விவசாயிகள் பருத்தி பயிர் செய்திருந்தனர். தற்போது, பருத்தி பூத்து, காய்கள் மொட்டு விட்ட நிலையில் தற்போதைய மழையால் பருத்தி பயிர் பெரும் அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அதே போல் தர்மபுரி, பாப்பிரெட்டிப்பட்டி, காரிமங்கலம், அரூர் ஆகிய பகுதியில் இறவை பாசன பகுதியில் அதிக அளவில் குச்சி கிழங்கு பயிர் செய்யப்பட்டு தற்போது அறுவடை பணிகள் நடந்து வருகிறது. அறுவடை செய்யாத நிலங்களில் தற்போதைய மழையால் வயல் வெளிகளில் நீர் தேங்கி கிழங்குகள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பதிவு செய்த நாள் : நவம்பர் 18,2010,00:54 IST

தர்மபுரி: தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் நாளை (நவ.,19) காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடக்கிறது. கலெக்டர் ஆனந்தகுமார் தலைமை வகிக்கிறார். விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள விவசாய சம்பந்தமான குறைகளை நேரிலும், மனுக்கள் மூலமும் தெரிவித்து, உரிய தீர்வு காணலாம்.

## நிலத்தடி நீர் செறிவூட்டல் திட்டம் விவசாயிகளுக்கு அழைப்பு

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,02:28 IST

தர்மபுரி: தமிழகம் முழுவதும் நிலத்தடி நீர் செறிவூட்டல் திட்டத்தை விரைவுப்படுத்த மாவட்ட வேளாண் பொறியியல் துறைக்கு அரசு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் நூறு சதவீதம் மானியத்தில் இத் திட்டத்தை செயல்படுத்த வேளாண் பொறியியல் துறை அழைப்பு விடுத்துள்ளது. மாவட்டத்தில் வேளாண் நீர் ஆதாரங்களாக விளங்கும் ஏரி, கசிவு நீர் குட்டைகளில் அரசு சார்பில் செயல்படுத்த ஒரு லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர விவசாயிகள் தங்களுக்கு சொந்தமான பகுதிகளில் கசிவு நீர் குட்டைகள் அமைக்கவும், அவற்றில் துளையுடன் கூடிய உறை குழாய்கள் அமைக்கவும் மானியம் வழங்கப்படுகிறது.

அந்தந்த பஞ்சாயத்து கசிவு நீர் குட்டைகள், கிராம குளம் மற்றும் தடுப்பணைகள் கட்டி அவற்றில் உறை குழாய்கள் அமைத்து நீர் பூமிக்குள் கொண்டு சேர்க்கப்படவுள்ளது.

மாவட்டத்தில் தற்போது 94 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகளுக்கு பண்ணை குட்டைகள் அமைப்பதற்கான செயல் முறை விளக்கம், மேப் அளிக்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் மூலம் மாவட்டத்தின் நீர் ஆதார மட்டம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் பயன்கள் குறித்து அறிந்துகொள்ளவும், திட்டத்தில் சேர்ந்து அரசு அளிக்கும் மானியத்தை பயன்படுத்தி தங்கள் விவசாய கிணறுகள் மற்றும் பண்ணை குட்டைகளை அமைக்க மாவட்ட வேளாண் பொறியியல் துறையை அணுகலாம்.

## கோபியில் அச்சு வெல்லம் உற்பத்தி பாதிப்பு :விலை அதிகரிக்கும் அபாயம்

பதிவு செய்த நாள் : நவம்பர் 18,2010,02:31 IS

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டாரத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக எரிபொருளாக பயன்படுத்தப்படும் கரும்பு சருகுகள் காயாததால் அச்சு வெல்லம் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பொங்கல் பண்டிகை நெருங்கும் நிலையில் வெல்லம் உற்பத்தி குறைந்துள்ளதால், விலை அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை மற்றும் புயல் சின்னம் காரணமாக மழை வெளுத்து வாங்குகிறது. ஈரோடு மாவட்டத்தில் கோபி, சத்தி, பவானி, நம்பியூர், பவானிசாகர் மற்றும் டி.என்.பாளையம் வட்டாரங்களில் ஒரு மாதமாக நல்ல மழை பெய்து வருகிறது. தொடர் மழையால் ஏற்பட்ட குளிர்ந்த சீதோஷ்ண நிலையால், கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் தேங்காய் பருப்பு உற்பத்தி ஏற்கனவே குறைந்துள்ளது. தற்போது அச்சு வெல்லம் உற்பத்தியிலும் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கோபி, கொளப்பலூர், கடத்தூர், கணக்கம்பாளையம், சிறுவலூர், குறவம்பாளையம், புஞ்சை துறையம்பாளையம், பங்களாப்புதூர், கள்ளிப்பட்டி, அத்தாணி, வெள்ளாங்கோயில், குருமந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் குண்டு வெல்லம் அதிகளவில் தயார் செய்யப்பட்டது. பொதுவாக கரும்பு சாற்றை பெரிய கொப்பரையில் ஊற்றி ஒரு மணி நேரம் வரை அடுப்பில் வைத்து பதப்படுத்தி, வெல்லம் தயார் செய்யப்படுகிறது. கரும்பு சாற்றை பதப்படுத்த, சாறு பிழியப்பட்ட கரும்பு சருகுகளை காய வைத்துதான் உற்பத்தியாளர்கள் எரிபொருளாக பயன்படுத்தி வருகின்றனர். நாளடைவில் கூலியாட்கள் பற்றாக்குறையால், பெரும்பாலான உற்பத்தியாளர்கள் அச்சு வெல்லத்துக்கு மாறினர். தொடர் மழை காரணமாக சாறு பிழியப்பட்ட கரும்பு சருகுகளை காய வைக்க முடியாமல் வெல்ல உற்பத்தியாளர்கள் திணறி வருகின்றனர். இதனால் தென்னை, பனை மட்டைகளை எரிபொருளாக பயன்படுத்தி அடுப்பு எரிய வைக்கின்றனர். மேலும் மழை காரணமாக அடுப்புகளில் ஈரப்பதம் அதிகரித்துள்ளது. மின்சார ஃபேன் மூலம் அடுப்பை காயவைத்தப்படி, அச்சு வெல்லம் பதப்படுத்தப்படுகிறது. இதனால் அச்சு வெல்லம் உற்பத்தியாளர்களுக்கு செலவு அதிகரித்துள்ளது. எரிபொருட்கள் கைவசம் இல்லாததால்

சில ஆலைகளில் வெல்லம் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. கூலியாட்கள் பற்றாக்குறையால் குண்டு வெல்லம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ள நிலையில்,தொடர் மழை காரணமாக அச்சு வெல்லம் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. பொங்கல் பண்டிகை காரணமாக வெளிமார்கெட்டில் குண்டு வெல்லம் 38 லிருந்து 41 ரூபாயாகவும், அச்சு வெல்லம் 37 லிருந்து 39 ரூபாயாகவும் உயர்ந்துவிட்டது. தற்போது உற்பத்தி குறைவால் குண்டு வெல்லம் மற்றும் அச்சு வெல்லம் விலை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழக அரசு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பொதுமக்களுக்கு அரிசி, வெல்லம் உள்ளிட்ட உணவு பொருட்களை இலவசமாக வழங்குவதாக அறிவித்துள்ளது. மாநிலம் முழுவதும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வெல்லத்தை கொள்முதல் செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. ஆனால், தொடர் மழை காரணமாக குண்டு வெல்லம் மற்றும் அச்சு வெல்லம் உற்பத்தி குறைந்துள்ளது. பொங்கல் பண்டிக்கைக்காக இலவச பொருட்களை வழங்க, வெல்லத்தை கொள்முதல் செய்வதில் அரசு அதிகாரிகளுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

**மழையால் அரிசி விற்பனை மந்தம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2010,01:56 IST

ஈரோடு: மழை காரணமாக ஈரோடு அக்ரஹாரம் அரிசி மார்க்கெட்டில் விற்பனை நேற்று முன்தினம் மந்தமாக காணப்பட்டது. ஈரோடு வீரப்பன்சத்திரம் அரிசி வாரச்சந்தை நேற்று கூடியது. மாவட்டம் முழுவதும் பருவமழை பெய்வதால், மார்க்கெட்டுக்கு அரிசி வரத்து குறைந்துள்ளது. வாரந்தோறும் மார்க்கெட்டுக்கு 3,000 மூட்டைக்கு குறைவில்லாமல் அரிசி விற்பனைக்கு வரும். மழையால் நேற்றைய மார்க்கெட்டுக்கு 2,500 மூட்டைகள் மட்டும் வரத்தாகி இருந்தது. மழையால் அரிசி வாங்குவோர் குறைந்துள்ளனர். அரிசி விற்பனை நேற்று மந்தமாக காணப்பட்டது. நேற்றைய நிலவரப்படி அரிசி விலை நிலவரம் (75 கிலோ): அதிசயப் பொன்னி (புதியது) 1,500 முதல் 1,550 ரூபாய், கர்நாடகா டீலக்ஸ் 2,250 முதல் 2,300 ரூபாய், தமிழ்நாடு பி.பி.டி., பொன்னி (பழையது) 1,900 முதல் 2,000 ரூபாய், இட்லி அரிசி 1,500 முதல் 1,600 ரூபாய், ஏ.டி.டி.36 (புதியது) 1,450 முதல்

1,550 ரூபாய், கோ -43 1,250 முதல் 1,350 ரூபாய், சோனா (பழையது) 1,450 முதல் 1,550 ரூபாய் வரை விலை போனது.

**வரத்து அதிகரிப்பால் மஞ்சள் விலை ரூ. 500 வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2010,01:49 IST

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு நேற்று ஒரே நாளில் 9,566 மூட்டை மஞ்சள் வரத்தானதால், 500 ரூபாய் வரை விலை வீழ்ச்சியடைந்தது. ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் சென்ற இரண்டு ஆண்டுகளாக மஞ்சள் நல்ல விலைக்கு விற்கப்படுகிறது. சில மாதங்களாக 14 ஆயிரத்து 200 ரூபாய் முதல் 14 ஆயிரத்து 500 ரூபாய் வரை விற்பனையானது. நேற்று முன்தினம் திடீரென விலை உயர்ந்து, 15 ஆயிரத்து 500 ரூபாய் வரை விற்பனையாகிறது. விலை உயர்வு காரணமாக மஞ்சள் மார்க்கெட்டுக்கு மஞ்சள் வரத்து திடீரென அதிகரித்தது. நேற்று ஒரே நாளில் ஒழுங்கு முறை விற்பனை கூடத்துக்கு 3,000 மூட்டைகள், வெளிமார்க்கெட்டுக்கு 4,135 மூட்டைகள், ஈரோடு சொசைட்டிக்கு 2,105 மூட்டைகள், கோபி சொசைட்டிக்கு 326 மூட்டைகள் என மொத்தம் 9,566 மூட்டைகள் வரத்தானது. நேற்று முன்தினம் நான்கு மஞ்சள் மார்க்கெட்டுக்கும் 5,000 மூட்டைகள் மட்டுமே வரத்தானது. மஞ்சள் வரத்து திடீரென உயர்ந்ததால் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 500 ரூபாய் வரை வீழ்ச்சியடைந்தது. நேற்றைய நிலவரப்படி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் விரலி மஞ்சள் 14 ஆயிரத்து 915 ரூபாய், கிழங்கு மஞ்சள் 15 ஆயிரத்து 19 ரூபாய்க்கு விற்கப்பட்டது. வெளி மார்க்கெட்டில் விரலி 15 ஆயிரத்து 99 ரூபாய், கிழங்கு 15 ஆயிரத்து 60 ரூபாய்க்கு விற்கப்பட்டது. ஈரோடு சொசைட்டியில் விரலி 14 ஆயிரத்து 915 ரூபாய், கிழங்கு 14 ஆயிரத்து 900 ரூபாய், கோபி சொசைட்டியில் விரலி 15 ஆயிரத்து ஒன்பது, கிழங்கு 14 ஆயிரத்து 889 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. வியாபாரிகள் கூறியதாவது: வடமாநிலங்களுக்கு மஞ்சள் தேவை அதிகம் தேவைப்படுவதால், வடமாநில வியாபாரிகள் "ஆன் லைன்' மூலம் மஞ்சள் விலையை உயர்த்தி வருகின்றனர். "ஆன் லைன்' வர்த்தகத்தால் உள்ளூர் வியாபாரிகளால் மஞ்சள் ஏலம் கோர முடியாத சூழ்நிலை உள்ளது. "ஆன் லைன்' வர்த்தகத்தை தடை செய்தால் மட்டுமே மஞ்சள் விலையை கட்டுப்படுத்த முடியும். இன்னும் சில வாரங்களில் மஞ்சள்

அறுவடை துவங்கி விடும். ஜனவரி முதல் வாரத்தில் இருந்து புது மஞ்சள் சீஸன் துவங்கி விடும்.தற்போது, இருப்பு வைக்கப்பட்டுள்ள மஞ்சள் மட்டுமே வரத்தாகிறது. பண்டிகை காலம் என்பதால், மஞ்சள் தேவை அதிகரித்துள்ளதால் மஞ்சள் விலை உயர்ந்தது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**மாட்டு சந்தையில் விற்பனை உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,02:14 IST

ஈரோடு: ஈரோடு மாட்டுச் சந்தையில் மாடு விற்பனை நேற்று நன்றாக இருந்தது. ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தை நேற்று கூடியது. சென்ற வாரத்தை காட்டிலும் மாடு வரத்து நன்றாக இருந்தது. சென்னை, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா மாநில வியாபாரிகள் மாடுகளை அதிகளவில் வாங்கிச் சென்றதால் விற்பனை நேற்று நன்றாக இருந்தது. வரும் வாரங்களிலும் மாடு விற்பனை நன்றாக இருக்கும் என வியாபாரிகள் கூறுகின்றனர். 400 சிந்து மாடுகளும், 300 எருமை மாடுகளும் விற்றன. சிந்து இன மாடுகள் 14 ஆயிரம் முதல் 29 ஆயிரம் ரூபாய் வரையும், எருமை மாடுகள் 12 ஆயிரம் முதல் 28 ஆயிரம் ரூபாய் வரையும் விலைபோனது. இவ்வாறு அவர் கூறினார்.

**"வெளுத்தது' மழை; நொய்யலில் வெள்ளம் குளங்கள் நிரம்புவதால் விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,00:59 IST

பேரூர் : வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் சிறுவாணி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்தமழை பெய்து வருகிறது. நொய்யல் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கோவை நகர் மற்றும் புறநகரிலுள்ள குளங்கள் நிரம்பி வருகின்றன.கடந்த ஜூன் மாதத்தில் எதிர்பார்க்கப்பட்ட தென்மேற்கு பருவமழை, கோவை மக்களை ஏமாற்றியது. இதனால், நகர் மற்றும் புறநகர் பகுதிகளிலிருக்கும் குளங்களில் பெருமளவு நீர் குறைந்தது. இதனால், நிலத்தடி நீர் மட்டமும் குறைந்து விவசாய கிணறுகளிலும், போர்வெல்களிலும் பல வறண்டன. விவசாயத்துக்கு போதிய தண்ணீர் இல்லாமல், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில், தற்போது வடகிழக்கு பருவமழை

தீவிரமடைந்துள்ளதால், கோவையில் கடந்த ஒரு வாரமாக தொடர்மழை பெய்து வருகிறது.

கடந்த இரு நாட்களாக நொய்யல் நீர்ப்பிடிப்பு பகுதிகளான கோவை குற்றாலம், சிறுவாணி அணை நீர்ப்பிடிப்பு பகுதி, மேற்குதொடர்ச்சிமலையடிவார பகுதி, வெள்ளியங்கிரி மலை, குஞ்சராடி மலை பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது; இதன் எதிரொலியாக, நொய்யல் ஆற்றில் நேற்று வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. நொய்யல் ஆற்றின் முதல் அணைக்கட்டான சித்திரைச் சாவடி அணையிலிருந்து தண்ணீர் சீறிபாய்ந்து சென்று கொண்டிருக்கிறது. மேலும், அணையின் இடது புற ஷட்டர் வழியே வாய்க்காலில் திறக்கப்பட்டுள்ள தண்ணீர் நான்கரை அடிக்கு செல்கிறது.

நொய்யல் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால், பேரூர் அருகேயுள்ள புட்டுவிக்கி அணை, புட்டுவிக்கி தரைப்பாலம், பேரூர் தமிழ்கல்லூரி பாலம் பகுதிகளில் தண்ணீர் பாய்ந்து செல்கிறது. சித்திரைச்சாவடி அணைக்கட்டிலிருந்து வாய்க்கால்கள் மூலமும் கோவையின் முக்கிய குளங்களுக்கு தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. குளங்களின் நிலவரம்: பேரூர் நொய்யல் ஆற்றிலிருந்து பிரியும் கிளை வாய்க்கால்களில் இருந்து உக்கடம் பெரியகுளத்துக்கு தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. நேற்றைய நிலவரப்படி, நாகராசபுரம் கிருஷ்ணாம்பதி குளம், வேடபட்டி கோளராம்பதி குளம், புதுக்குளம் ஆகியவை நிரம்பியுள்ளன.

உக்கடம் பெரியகுளம், முத்தண்ணன்குளம், செல்வாம்பதி குளம், செங்குளம், பேரூர் செட்டிபாளையத்திலுள்ள கங்கநாராயண சமுத்திர குளம், சொட்டையாண்டி குளம், பேரூர் பெரியகுளம், செல்வபுரம் செல்வசிந்தாமணி குளம் ஆகிய குளங்களுக்கும், தண் ணீர் பாய்ந்து வருகிறது. மேலும், மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரப் பகுதிகளில் பெய் யும் கனமழையால் ஆறுமுகக்கவுண்டனூர், பச்சாபாளையம், தீத்திபாளையம் உள்ளிட்ட மலையடிவார கிராமங்களில் உள்ள, பள்ளங்களிலும் வெள்ளம் பெருக் கெடுத்துள்ளது.

**தென்னை விவசாயிகளுக்கு இழப்பீடு :விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 17,2010,22:54 IST

சூலூர்: "மின் கோபுரங்கள் அமைக்க வெட்டப்பட்ட தென்னை மரங்களுக்கு இழப்பீடு தொகை பெற்றுத்தர, தென்னை நல வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத் துள்ளது. சங்கத்தின் மாவட்ட தலைவர் சண்முகம் தென்னை விவசாயிகள் நல வாரியத்தலைவருக்கு அனுப்பியுள்ள மனு: தமிழகத்தில் குறைந்துவரும் மழையால், பல மாவட்டங்களில் தண்ணீர் பற்றாக்குறை உள்ளது. விவசாயத்துக்கு ஆள் பற்றாக்குறையால், தானியப்பயிர் சாகுபடியை விவசாயிகள் கைவிட்டனர். விவசாயிகள் காய்கறி சாகுபடியையும் மெல்ல தவிர்த்து வருகின்றனர். காய்கறி விலை ஏற்றத்துக்கு இதுவும் காரணம். தண்ணீர் பற்றாக்குறையால் சொட்டுநீர் பாசனத்துக்கு மாறி தென்னை விவசாயத்தை மேற்கொண்டனர்.

அதிக உற்பத்தியால், தேங்காய்க்கு உரிய விலை கிடைக்கவில்லை. இந்நிலையில், தமிழகத்தின் பல பகுதிகளில் உயர் அழுத்த மின் கோபுரங்கள் அமைக்க, பல ஆயிரம் தென்னை மரங்கள் வெட்டப் பட்டன. இதற்கான இழப்பீட்டு தொகை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. எனவே, இதை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது

**செட்டிகுளம் நிரம்பி, பயிர்கள் நீரில் மூழ்கின : கரை உடைவதற்குள் நடவடிக்கை தேவை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,00:45 IST

உடுமலை : செட்டிகுளத்தில் இருந்து உபரி நீர் வெளியேறும் வாய்க்கால் அடைக்கப் பட்டுள்ளதால், குளம் நிரம்பி அருகிலுள்ள 100 ஏக்கர் பரப்பில் விவசாய பயிர்கள் முற்றிலுமாக தண்ணீரில் மூழ்கியுள்ளன. கரைகள் உடைந்து பலத்த சேதம் ஏற்படும் முன் நடவடிக்கை எடுக்க விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.திருமூர்த்தி அணை பழைய ஆயக்கட்டு பகுதியில் உள்ள ஏழு குளங்கள் மூலம் பல ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

பள்ளபாளையம் கிராமம் அருகில் உள்ள செட்டிகுளம் 67.49 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. குளத்தின் ஒரு கரையை ஒட்டி அமைந்துள்ள பகுதியில் சந்தனகருப்பனூர் மற்றும் சுற்றுப்பகுதி கிராமங்களை சேர்ந்த வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் 50 பேருக்கு 1974 ம் ஆண்டு அரசால் விவசாயம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.நீர்த்தேக்க பரப்பில் உள்ளடங்காத இப்பகுதியில் விவசாயிகள் பல ஆண்டுகளாக கரும்பு பயிரிட்டு வருகின்றனர். மழைக்காலங்களில் செட்டிகுளத்திற்கு தண்ணீர் வரத்து அதிகரித்தாலும், உபரி நீர் குளத்தின் கிழக்கு பகுதியில் உள்ள வாய்க்கால் வழியாக வெளியேற்றப்பட்டதால் விளைநிலங்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

இந்நிலையில், கடந்த 2004 ம் ஆண்டு திருமூர்த்திமலை ரோட்டில் இருந்து பள்ளபாளையம் கிராமத்துக்கு செட்டிகுளம் கரையை ஒட்டி ரோடு போடப்பட்டது. வடிகால் அமைப்பை கடந்து செல்லும் ரோடு போடும் பணிக்காக ஒன்றிய நிர்வாகம் தரப்பில் பொதுப்பணித்துறையினரிடம் முறையாக அனுமதி பெறப்படவில்லை என்று கூறப்படுகிறது. செட்டிகுளத்தில் இருந்து உபரி நீர் வெளியேறும் வாய்க்கால் முழுவதும் அடைக்கப்பட்டு, ரோடு போடப்பட்டது. தண்ணீர் வெளியேற சிறிய குழாய் கூட பதிக்கப்படவில்லை. விவசாயிகள் தரப்பில் எதிர்ப்பு தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.மேலும், மற்றொரு உபரி நீர் வடிகால் அமைப்பில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஷட்டர் அமைத்ததால், அவ்வழியிலும் உபரி நீர் வெளியேற முடியாத நிலை ஏற்பட்டது.

கடந்த சில நாட்களாக உடுமலை பகுதியில் தொடர்மழை பெய்து வரும் நிலையில், செட்டிகுளத்துக்கு நீர் வரத்து பல மடங்கு அதிகரித்து, நேற்று முன்தினம் குளம் நிரம்பியது. உபரி நீர் வெளியேற்ற எந்த வழியும் இல்லை. இதனால், தண்ணீர் முழுவதும் அருகிலுள்ள விளைநிலங்களுக்குள் புகுந்தது. பயிரிடப்பட்டு இரண்டு மாதங்களான கரும்பு பயிர்கள் முழுவதும் தண்ணீரில் மூழ்கியது. படிப்படியாக தண்ணீர் விளைநிலங்களில் சென்று நூறு ஏக்கர் பரப்பில் முழுவதுமாக பயிர்கள் தண்ணீரில் காணாமல் போயுள்ளது. அதிர்ச்சியடைந்த விவசாயிகள் பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், "அதிகாரிகளின் அலட்சியத்தால் இந்த சீசனில் ஏக்கருக்கு 25

ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. உபரி நீர் வடிகால் அமைப்பை உடனடியாக அதிகாரிகள் ஏற்படுத்த வேண்டும். இல்லாவிட்டால், குளத்தின் நீர்தேக்க கொள்ளளவு தாங்காமல் கரைகள் உடைந்து அருகிலுள்ள குடியிருப்பு பாதிக்கப்படும். இதுகுறித்து விரைவில் போராட்டத்தில் ஈடுபட திட்டமிட்டுள்ளோம்,' என்றனர்.

### தேயிலைத் தொழிற்சாலை கட்டுவதில் புதிய வழிகாட்டுதல்

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,23:18 IST

கோத்தகிரி :"புதிய தேயிலைத் தொழிற்சாலை கட்டுவதில், தேயிலை வாரியத்தின் வழிக்காட்டுதலால், சிறு விவசாயிகளின் உரிமை பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது' என, காங்., புகார் தெரிவித்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில், 65 ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறு, குறு விவசாயிகள், தங்களது பசுந்தேயிலையை இன்ட்கோ மற்றும் தனியார் தொழிற்சாலைக்கு வினியோகிக்கின்றனர். கடந்த காலங்களில் நிலவிய பல சிக்கல்களால், இன்ட்கோ தொழிற்சாலைகள் உட்பட பல தனியார் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. தேயிலைத் தோட்டத்தின் பரப்புக்கு ஏற்ப, தொழிற்சாலைகள் இல்லாததால், பசுந்தேயிலையை வினியோக்க முடியாமல், மகசூல் அதிகரிக்கும் காலங்களில், விவசாயிகள் இழப்பை சந்தித்து வருகின்றனர்.கடந்த காலங்களில், தொழிற்சாலை கட்டி முடித்த பின்பே, தேயிலை வாரியத்திடம் இருந்து உரிமம் பெற்று உற்பத்தி துவக்கப்பட்டது; இது, புதிய தொழிற்சாலை கட்டுவோருக்கும், விவசாயிகளுக்கும் ஏற்றதாக இருந்தது. தற்போது, தேயிலை வாரியம், புதிய வழிகாட்டுதலை அறிவித்துள்ளது. இதன்படி, "புதிதாக தொழிற்சாலை கட்டுவோர், முன்பிருந்தது போல் அல்லாமல், தொழிற்சாலை கட்டுவதற்கு முன்பே, தேயிலை வாரியத்திடம் அனுமதி பெற வேண்டும். தொழிற்சாலை அமைய உள்ள இடத்தில் இருந்து 10 கி.மீ., சுற்றளவுக்கு, வேறெந்த தொழிற்சாலையும் இருக்கக் கூடாது; அப்பகுதியில் உள்ள விவசாயிகளின் முழு விபரத்துடன், விவசாயிகள் ஒவ்வொருவரும் தேயிலை பயிரிட்டுள்ள பரப்பு, ஆண்டுக்கு கிடைக்கும் மகசூல் அளவு, குறிப்பிட்ட தொழிற்சாலைக்கு வினியோகிக்க உள்ள அளவு உட்பட விபரங்களை, தேயிலை வாரியத்துக்கு முன்னரே தெரிவிக்க வேண்டும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது. தவிர, தொழிற்சாலை கட்ட, தேயிலை வாரியத்தில் அனுமதி பெற விண்ணப்பிக்கும் போது, அதை ஆய்வு செய்ய, தேயிலை வாரிய துணைத் தலைவர் அல்லது செயல் இயக்குனர்,

தமிழக அரசின் இணை இயக்குனர் அந்தஸ்துக்கு குறையாத, நிலம் மற்றும் வருவாய் அதிகாரி, வர்த்தகம் மற்றும் தொழில் துறை அதிகாரி, உரிமம் வழங்கும் அதிகாரி மற்றும் வாரிய ஆலோசகர் கொண்ட குழு ஆராய்ந்து, இதன் அறிக்கையை வாரியத்துக்கு அனுப்புகிறது. இந்த நடைமுறை முடிவதற்குள் குறைந்தபட்சம் 6 மாதம் காலம் தேவைப்படுகிறது; அனுமதி கிடைக்கும் பட்சத்தில், தொழிற்சாலை கட்டுமானத்துக்கும், இயந்திரங்கள் நிறுவுவதற்கும் மேலும் காலதாமதம் ஏற்படும்.கால விரயத்தால், ஓராண்டு இடைவெளியில் ஏற்படும் விலையேற்றத்தால், நிர்ணயித்த "பட்ஜெட்' அதிகரிக்கும் என்பதால், தொழிற்சாலை நிறுவ இருக்கும் எண்ணம் கூட மாற வாய்ப்புள்ளதாக, தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் பலர் கவலை தெரிவிக்கின்றனர். இதைத் தவிர்த்து, விவசாயிகள் நலன் காக்க வேண்டும் எனில், ஏற்கனவே மூடப்பட்டுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.தவறும் பட்சத்தில், மூடப்பட்ட தொழிற்சாலையின் எண்ணிக்கைக்கு ஏற்ப, புதிய தொழிற்சாலை நிறுவ, வாரியத்தின் புதிய கட்டுப்பாடுகளை தளர்த்தவேண்டும் என, கோரிக்கை எழத் துவங்கியுள்ளது. இதுகுறித்து, குன்னூர் வடக்கு வட்டார காங்., தலைவர் கமலா சீராளன், கொல்கத்தா தேயிலை வாரியத் தலைவருக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளார்.

**மழையால் வாடும் மலர்கள்: பார்வையாளர்கள் ஏமாற்றம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,23:15 IST

ஊட்டி :ஊட்டியில் பெய்து வரும் மழையால், பூங்காக்களில் மலர்ந்துள்ள மலர்கள் பாதிக்கப்பட்டுள்ளன; பார்வையாளர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும், சில நாட்களாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக ஊட்டியில், இரவு நேரங்களில் மழையின் தாக்கம் அதிகமாக உள்ளது. இதனால், ஊட்டிக்கான நீராதாரங்களில், மட்டம் உயர்ந்து வருகிறது. காலநிலை மாற்றத்தால், இரவில் குளிர் நிலவுகிறது. தாவரவியல் பூங்கா, ரோஜாப் பூங்காக்களில் உள்ள மலர்கள் அழுகி வருகின்றன. ஊட்டி ரோஜாப் பூங்காவில் மலர்ந்திருந்த பெரும்பாலான மலர்கள் பாதிக்கப்பட்டதால், பார்வையாளர்கள் ஏமாற்றமடைந்து வருகின்றனர். ரோஜாப் பூங்காவுக்கு வந்த சுற்றுலாப் பயணி பாபு கூறுகையில், ""பக்ரீத்

விடுமுறையை தொடர்ந்து, கேரளாவிலிருந்து ஊட்டிக்கு குடும்பத்துடன் வந்தோம். கடந்த இரு நாட்களாக பெய்து வரும் மழையால், பூங்காக்களில் உள்ள மலர்கள் அழுகி வருகின்றன. காலநிலையும் மோசமாக உள்ளதால், ஏமாற்றம் அடைந்தோம்," என்றார். மழையின் தீவிரம் குறைந்தால் மட்டுமே, சுற்றுலா ஸ்தலங்களில், சுற்றுலாப் பயணிகள் கூட்டம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

## வரத்து அதிகரிப்பால் வெங்காயம் விலை சரிவு! : திடீர் மாற்றம் தானே தவிர இனி ஏற்றம் தான்

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,02:30 IST

திருச்சி: வரத்து அதிகரித்ததால் கடந்த இரண்டு நாட்களாக உச்சத்தில் இருந்த வெங்காயம் விலை நேற்று குறைந்திருந்தது. "வெங்காயம் விலையில் இது திடீர் மாற்றம் தானே தவிர, இனி விலை அதிகரிக்கத் தான் செய்யும்' என வியாபாரிகள் தெரிவித்தனர். திருச்சி மார்க்கெட்டுக்கு மஹாராஷ்டிரா, பெங்களூரு பகுதிகளிலிருந்து தான் பெரிய வெங்காயம் கொண்டு வரப்படுகிறது. கிளை சிறைச்சாலை பகுதியில் 63 வெங்காய கமிஷன் மண்டிகள் இயங்குகின்றன. நாள் ஒன்றுக்கு 16 டன் எடை கொண்ட 24 "டாரஸ்' லாரிகள் மூலம் வெங்காயம் கொண்டு வரப்படுகின்றன. இங்கிருந்து தஞ்சாவூர், புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், நாகப்பட்டினம் உள்பட பல்வேறு மாவட்டங்களுக்கு வெங்காயம் கொண்டு செல்லப்படுகிறது.

தமிழகம், கர்நாடகாவில் பெய்து வரும் கனமழை காரணமாக ஏராளமான வெங்காய பயிர்கள் அழுகிவிட்டன. பறித்த வெங்காயமும் அழுகும் அபாயத்தில் உள்ளன. சில ஆண்டுக்கு முன் வெங்காய விலையேற்றத்தால் டில்லியில் ஆட்சி மாற்றமே ஏற்பட்டதை யாரும் மறக்க முடியாது. கடந்த ஐந்து நாட்களாக 30, 35, 38, 40 என விற்ற ஒரு கிலோ வெங்காயம் முன்தினம் 46 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதனால், தமிழகம் முழுவதும் மக்கள் அதிர்ச்சியடைந்தனர். இதேபோல், சென்னை, டில்லி, மும்பை உள்பட பல்வேறு பகுதிகளில் வெங்காயம் விலை அதிகரித்துள்ளது. திருச்சிக்கு வெங்காயம் வரத்து அதிகரித்ததால் நேற்று சற்று விலை குறைந்து காணப்பட்டது. முன்தினம் 1,000 ரூபாய்க்கு விற்ற 50 கிலோ கொண்ட ஒரு மூட்டை பெங்களூரு வெங்காயம் மொத்த விலையில் நேற்று 600 ரூபாய்க்கு விற்றது. மஹாராஷ்டிரா பெரிய வெங்காயம் (பழசு) 1,800, 1,600 என்ற இரண்டு விலையில் விற்கப்பட்டது. சில்லரை

விலை கடைகளில் 40, 42 எனவும், உழவர் சந்தைகளில் 38, 34 எனவும் விற்கப்படுகிறது. "இந்த விலை இன்னும் உயர வாய்ப்புள்ளது' என வெங்காய வியாபாரிகள் தெரிவித்தனர்.

பெரிய வெங்காயம் விலை உயர்ந்துள்ளதால் டீக்கடை, பஜ்ஜி, போண்டா கடைகளில், வெங்காய "பஜ்ஜி' போடுவதை கடைக்காரர்கள் தற்காலிகமாக கைவிட்டுள்ளனர். தவிர, பிரியாணி கடைகளில் தயிர் சட்னியில் வெங்காயத்துக்கு பதிலாக முட்டைகோஸ், வெள்ளரி பயன்படுத்துகின்றனர். இதனால், வெங்காய பிரியர்கள் வருத்தத்தில் உள்ளனர். காய்கறி விலை நிலவரம்: நேற்றைய நிலவரப்படி காய்கறி விலை ஒரு கிலோவில்: தக்காளி 9, கத்தரி 24, பச்சைமிளகாய் 20, உருளை 18, கேரட் 28, பீட்ரூட் 10, அவரை 48, 36, 30, வெண்டை 12, 10, கொத்வரங்காய், புடலங்காய் 10, பீர்க்கங்காய் 14, 12, பாவற்காய் 18, முருங்கை 54, 45, முள்ளங்கி 14, 12, தட்டை 12, மாங்காய் 38, 26, பரங்கி, பூசணி, சுரை 5, இஞ்சி 34, கருணை 20, சேனை 24, சேப்பை 20, சின்னவெங்காயம் 20, பெரியவெங்காயம் 38, 34, பீன்ஸ் 26, கோஸ் 10, சவ்சவ் 8, பட்டானி 80, காளிஃப்ளவர் 12, 10, 8 ரூபாய் என விற்கப்பட்டது. ஒரு கட்டு மல்லி 14, புதினா 12, கருவேபில்லை 18 என விற்றது.

## கரும்பு டன்னுக்கு ரூ.1,925 வழங்கப்படும் தனலட்சுமி சீனிவாசன் சுகர்ஸ் லிமிடெட் நிறுவனர் அறிவிப்பு

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,02:33 IST

பெரம்பலூர்: ""நடப்பாண்டு கரும்பு டன் ஒன்று 1,925 ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்படும்," என, பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் சுகர்ஸ் லிமிடெட் நிறுவனர் மற்றும் தலைவர் சீனிவாசன் தெரிவித்தார்.
நேற்று நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டி: தனலட்சுமி சீனிவாசன் சர்க்கரை ஆலை 145 ஏக்கரில் 350 கோடி ரூபாயில் அமைக்கப்பட்டு கடந்த ஜனவரி 21 ம் தேதி அரவையை துவக்கியது. கடந்தாண்டு டன் ஒன்றுக்கு 1,750 மற்றும் லாரி வாடகையாக 175 ரூபாயும் என 1,925 வழங்கினோம். நடப்பாண்டு அரவை பருவத்திற்கு அரசு டன் ஒன்றுக்கு 1,900 ரூபாய் வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.ஆனால், அரசு அறிவித்துள்ள விலையை விட விவசாயிகளின் நலன் கருதி டன்னுக்கு 25 ரூபாய் கூடுதலாக 1,925

ரூபாய் வழங்க உள்ளோம். இதனுடன் லாரி வாடகையாக டன்னுக்கு 175 ரூபாயும் சேர்த்து 2,100 ரூபாய் வழங்க உள்ளோம். இது 9.5 சதவீத பிழிதிறன் கொண்ட கரும்புக்கு பொருந்தும்.

உரிய நேரத்தில் அரைப்பதற்காக 3 கோடி ரூபாய் மதிப்பில் கட்டிங் மிஷின் வாங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். கரும்பு வெட்டுவதற்கு விவசாயிகள் பதிவு செய்த பின் குறிப்பிட்ட நேரத்தில் வெட்டப்படும்.

கரும்பு விவசாயிகளுக்கு மினி டிராக்டர் வாங்க வங்கியிலிருந்து கடனுதவி பெற்றுத்தருவதுடன் 10 ஆயிரம் ரூபாய் மானியமாக ஆலை நிர்வாகத்தின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறோம். தோகை உரிக்கும் இயந்திரம் வாங்க 10 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்குகிறோம்.இதுவரை 10 கோடி ரூபாய் பயிர் கடனாக விவசாயிகளுக்கு வழங்கி உள்ளோம். 5.1 கோடி ரூபாய் மதிப்பில் 1,700 ஏக்கரில் சொட்டு நீர் பாசனம் அமைக்க மானியம் வாங்கி தந்துள்ளோம். ஆலைக்கு கரும்பு அனுப்பும் விவசாயிகளுக்கு டன்னுக்கு அரை கிலோ வீதம் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 50 கிலோ வரை மானிய விலையில் சர்க்கரை வழங்குகிறோம்.நடப்பாண்டு 10 ஆயிரம் ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் இது 25 ஆயிரம் ஏக்கரில் கரும்பு சாகுபடி முடிவு செய்துள்ளோம். விவசாயிகள் பயிர் கடன், மானியம் வாங்கி தர ஆலை நிர்வாகம் ஏற்பாடு செய்து வருகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது, தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்களின் செயலாளர் நீல்ராஜ், நிர்வாக செயல் இயக்குநர் சிவக்குமார், உதவி பொது மேலாளர் (கரும்பு) பாலசுப்ரமணியன், மண்டல மேலாளர்கள் ஜெயராமன், சிவக்குமார், மேலாளர் செந்தில் உட்பட பலர் உடனிருந்தனர்.

**டிச.,15 க்குள் பயிர் காப்பீடு செய்யணும் : விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தஞ்சை மாவட்ட கலெக்டர் தகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2010,01:49 IST

தஞ்சாவூர்: தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. கலெக்டர் சண்முகம் பேசியதாவது: மழை பெய்வதால் மேட்டூர் அணை நீர் மட்டம் 109.21 அடியாக உள்ளது. நீர் வரத்தும் திருப்தியாக உள்ளது. சம்பா, தாளடிக்கு பயிர்கடன் கூட்டுறவு மூலம் 79.43 கோடியும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கி மூலம் 420 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. மேலஉளூர் விவசாயிகள் கடந்தாண்டு மழையால் பாதிக்கப்பட்டமைக்கு பயிர் இன்சூரன்ஸில் மத்திய தொகுப்பு நிதி பெற்றுவிட்டனர். தற்போது, மாநிலத்தொகுப்பு மூலம் 1.51 கோடி வந்துள்ளது. கூட்டுறவு வங்கி மூலம் அவர்களுக்கு வழங்கப்படும்.

சம்பா பருவத்துக்கு டிசம்பர் 15 ம் தேதிக்குள் பயிர் காப்பீடு செய்ய வேண்டும். கடந்தாண்டு பயிர் காப்பீடு செய்தவர்களுக்கு 88 லட்சம் ரூபாய் இழப்பீடு தொகை பெற்றுத்தரப்பட்டுள்ளது. தற்போது, 383 டன் விதை நெல் விற்கப்பட்டுள்ளது. 131 டன் விதை நெல் கையிருப்பில் உள்ளது. குறிப்பிட்ட ரக நெல் விதை தேவை என்றால் உடன் பெற்றுத்தரப்படும். 32 ஆயிரம் டன் உரம் விற்கப்பட்டுள்ளது. ஒன்பதாயிரம் டன் யூரியா, டி.ஏ.பி., உட்பட 12 ஆயிரம் டன் உரம் இருப்பில் உள்ளது. உரம் தட்டுப்பாடு என்று தகவல் தெரிவித்தால் அருகில் உள்ள குடோனில் இருந்து உரம் வழங்கப்படும். குறுவை பருவ அறுவடை முடியும் நிலையில் உள்ளது. கொள்முதல் நிலையம் மூலம் 48 ஆயிரத்து 193 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வரை 148 நேரடி நெல் கொள்முதல் நிலையம் செயல்பட்டது. அறுவடை முடிந்ததால் நேற்று முதல் 97 கொள்முதல் நிலையம் செயல்படுகிறது. 20 சதவீத ஈரப்பதத்தில் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.

கூட்டுறவு வங்கியில் ஏற்கனவே பெற்ற கடலில் 60 சதவீதம்தான் திரும்ப செலுத்தப்பட்டுள்ளது. குறுவைப்பருவத்தில் நல்ல மகசூல் கிட்டிய நிலையில், விவசாயிகள் பெற்ற கடனை திரும்ப செலுத்தினால் வங்கிகள் ஆரோக்கிய நிலையில் இருந்து மீண்டும் விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்க ஏதுவாகும். கல்லணை

கால்வாயில் முறை வைக்காமல் தண்ணீர் விடப்படும். இவ்வாறு கலெக்டர் பேசினார். கர்நாடகத்தில் நடந்த அனைத்து கட்சிக்கூட்டத்தில், "தமிழகத்துக்கு தண்ணீர் வழங்க இயலாது,' என தீர்மானம் நிறைவேற்றியதை கண்டித்து விவசாயிகள் கறுப்பு கொடி அணிந்து வந்தனர்.
தமிழ்நாடு விவசாய சங்கம் சாமிநடராஜன், ""தொடர் மழையால் நீர்வழிப்பாதையில் உடைப்பு ஏற்படும் நிலை உள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கை வேண்டும்," என்றார்.

வக்கீல் ஜீவகுமார், ""வாழைக்கு இந்தாண்டு கூட்டுறவு கடன் வசதி அறிவிக்கப்படவில்லை. வாழைக்கு கொள்முதல் ஏற்பாடு செய்ய வேண்டும். பாமாயில் மரம் வைத்துள்ள விவசாயிகளுக்கும் கொள்முதலுக்கு வசதி செய்ய வேண்டும்," என்றார். சுவாமிமலை சுந்தரவிமலநாதன், ""கரும்பு டன் ஒன்றுக்கு மூன்றாயிரம் ரூபாய் விலை அறிவிக்க முத்தரப்பு கூட்டத்தை கூட்டி அறிவிக்க வேண்டும்," என்றார். தோழகிரிப்பட்டி கோவிந்தராஜ், ""குருங்குளம் சர்க்கரை ஆலைக்கு உட்பட்ட பகுதியில் கரும்பு வெட்ட ஆட்கள் கிடைக்காததால், கரும்பு வெட்டு இயந்திரத்தை ஆலை நிர்வாகம் கொண்டு வர வேண்டும்," என்றார்.
சவரிமுத்து, ""தேங்காய் வியாபாரிகளிடம் கடன் பெற்று தென்னை விவசாயிகள் மீளாக்கடனில் உள்ளனர். வங்கிகள் தென்னை விவசாயிகளுக்கு தேவையான அளவு கடன் வழங்க வேண்டும். கேரளா மாநிலம் போல, உரித்தேங்காயை தமிழக அரசும் கொள்முதல் செய்ய வேண்டும்," என்றார்.
மதுக்கூர் சந்திரன், ""மதுக்கூர் வடக்கு கருப்பேரியில் தண்ணீர் வீணாகாமல் தடுக்க மதகுகளில் அடைப்பு பலகை அமைக்க வேண்டும். அரசு இலவச "டிவி' பெற்றவர்களுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும்," என்றார்.இவ்வாறு விவாதம் நடந்தது.

**நவீன இயந்திரம்மூலம் நெல் நடவு : விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2010,02:32 IST

சோழவந்தான்: ராஜராஜன் 1000 திட்டத்தில் நவீன இயந்திரத்தின்முலம் நெல் நாற்று நடவு பயிற்சி முகாம் நடந்தது. சோழவந்தான் பேட்டை கிராமத்தில், பாண்டி என்பவரது நிலத்தில் வேளாண் துறை, குருரமணர் அக்ரிகேர் சார்பில் ராஜராஜன் 1000 சாகுபடி செயல் விளக்கம் நடந்தது. மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சங்கரலிங்கம்

தலைமை வகித்தார். வாடிப்பட்டி வேளாண்மை உதவி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார். குருரமணர் அக்ரிகேர் இயக்குநர் செந்தில் குமார், செயல் விளக்கம் அளித்தார். ஜப்பான் நாட்டு பொறியாளர்கள் சாத்தோ சியோஷி, மாத்சு மோட்டோ, இயந்திர செயல்பாட்டை துவக்கி வைத்தனர். சோழவந்தான் பேரூராட்சி துணை தலைவர் அண்ணாதுரை, துணை வோளாண்மை அலுவலர் அம்பிகாபதி, உதவி வேளாண்மை அலுவலர்கள் சந்தனகருப்பு, முத்தையா மற்றும் நூற்றுக்கும் அதிகமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**நெற்பயிரில் ஏற்படும் இலை மடக்குப்புழு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,02:49 IST

மதுரை: தற்போது சாகுபடி செய்துள்ள நெற் பயிரில், இலை மடக்குப்புழுக்கள் ஏற்படுதை கட்டுப்படுத்துவது பற்றி, ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் முருகேசன் தெரிவித்துள்ளதாவது: மழைக்குப் பின்னர் வெயிலடிக்கும் போதும், தழைச்சத்து உரம் இட்டதும், நிழலான பகுதிகளிலும், தொழு உரம் இடுமுன் தழைச்சத்து உரம் அதிகம் விழுந்த இடங்களில் இலை மடக்குப்புழு நோய் ஏற்படும். இந்நோய் ஏற்பட்ட பயிர்களின் இலைகள் வெண்ணிறமாக அரிக்கப்பட்டு சுருட்டப்படுகிறது. பயிர் வெளுத்துப் புகைந்தது போல் காணப்படும். இதைக் கட்டுப்படுத்த மானோகுரோடடோபாஸ் ஏக்கருக்கு 400 மி அல்லது குளோர்பைரிபாஸ் ஏக்கருக்கு 500 மி மருந்தை பயிர் முழுவதும் படும்படி, மாலையில் தெளிப்பதன் மூலம் இந்நோயைக் கட்டுப்படுத்தி மகசூலை அதிகரிக்கலாம்.

**நெல் சாகுபடி வயல் விழா**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2010,00:52 IST

சின்னமனூர்: சின்னமனூர் கருங்கட்டான் குளம் பகுதியில் விவசாயத்துறையின் சார்பில் இராஜராஜன் 1000 நெல் சாகுபடி வயல் விழா நடந்தது. சின்னமனூர் வட்டாரத்தில் முதல்போக நெல் சாகுபடியில் 50 சதவீத பரப்பிற்கு மேல் 808 ஹெக்டேர் பரப்பில் இராஜராஜன் 1000 ரக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதி விவசாயி முத்து

வயலில் விவசாயிகள் முன்னிலையில் நெல் அறுவடை செய்யப்பட்டு மகசூல் கணிக்கப்பட்டது.

ஒரு எக்டேருக்கு 12080 கிலோ விளைச்சள் பெற்றதை விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. இதனை வயல் விழாவாக நடத்தப்பட்டது. விவசாய உதவி இயக்குனர் முகமது நகீப் வரவேற்றார். மாவட்ட இணை இயக்குனர் செல்லத்துரை, துணை இயக்குனர் கோவிந்தராஜன் கலந்து கொண்டு மகசூல் விபரம் குறித்தும், இந்த ரகத்தின் மூலம் சின்னமனூர் வட்டாரத்தில் கூடுதல் மகசூல் பெறப்பட்டுள்ளது குறித்தும் தெரிவித்தனர். விவசாய துணை அலுவலர் குமரன் அறுவடை கணிப்பு பணியினை செய்திருந்தார். விவசாய அலுவலர் சங்கர் நன்றி கூறினார். ஏற்பாடுகளை விவசாய அலுவலர்கள் ஜானகிராமன், சிவக்குமார், அன்புக்காமன் ஆகியோர் செய்திருந்தனர்.

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2010,00:22 IST

ராமநாதபுரம்: நவ., மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நவ., 30 ல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கலெக்டர் அலுவலக வளாகத்தில் காலை 10 மணிக்கு கலெக்டர் ஹரிஹரன் தலைமையில் நடக்கும் கூட்டத்தில், விவசாயிகள் மற்றும் சங்க பிரதிநிதிகள் பங்கேற்று குறைகளை கூறலாம். "விவசாயம் தொடர்பான கேள்விகளுக்கு மட்டுமே பதிலளிக்கப்படும்,' என, மாவட்டர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**கரும்பு கொள்முதல் விலை நிர்ணயிக்க முத்தரப்பு கூட்டம் நடத்தாததால் சிக்கல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2010,00:42 IST

விருதுநகர்: அரவை துவங்கியும் கரும்பு கொள்முதல் செய்ய விலை நிர்ணயிக்கும் முத்தரப்பு கூட்டம் நடத்தாததால், விவசாயிகளுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. தமிழக விவசாயிகளுக்கு கரும்பு டன்னுக்கு 1900 ரூபாய், போக்குவரத்துக்காக 100 ரூபாய் வழங்கப்படுகிறது. மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம், கர்நாடகாவில் வழங்கப்படுவது போல டன்னுக்கு 2,500 ரூபாய் வழங்க தமிழக விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில் நவ.,1 முதல் ஆலைகளில் அரவை துவங்கப்பட்டுவிட்டது. கரும்பு

அரவைக்கு முன்னரே, கொள்முதல் விலை நிர்ணயம் செய்வதற்காக ஆலை உரிமையாளர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் பங்கேற்கும் முத்தரப்பு கூட்டம் இதுவரை நடத்தப்படவில்லை. தமிழக விவசாயிகள் சங்க விருதுநகர் மாவட்ட தலைவர் ராமச்சந்திர ராஜா கூறியதாவது: விலையே தெரியாமல் ஆலைகளுக்கு கரும்பு அனுப்பப்படுறது. இதனால் விவசாயிகளுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. அரசு உடனடியாக முத்தரப்பு கூட்டம் நடத்தி விலை நிர்ணயிக்க வேண்டும், என்றார்.

**பயிர் காப்பீடு நஷ்ட ஈடு பெற அலைக்கழிப்புகுறை தீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் புகார்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2010,04:33 IST

திருநெல்வேலி:பயிர் காப்பீட்டு நஷ்ட ஈடு பெற அலைக்கழிக்கப்படுவதாக நெல்லையில் நேற்று நடந்த குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.நெல்லை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. டி.ஆர்.ஓ ரமண சரஸ்வதி தலைமை வகித்தார். வேளாண்மைத் துறை இணை இயக்குனர் தேவசகாயம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வைத்தியலிங்கம் முன்னிலை வகித்தனர்.தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் குறித்து காப்பீட்டு நிறுவன நிர்வாக அலுவலர் பிரசிதா விளக்கினார்.இதில் விவசாயிகள் பலர் பேசியதாவது:பயிர் காப்பீட்டிற்காக விவசாயிகளிடம் பணம் பெறப்படுகிறது.

ஆனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சான்று வாங்க அலைக்கழிக்கப்படுகின்றனர். ஒரு சிலருக்கு மட்டுமே நஷ்ட ஈடு கிடைக்கிறது. ஏழை எளிய விவசாயிகளுக்கு இத்தொகை கிடைப்பதில்லை. எனவே, விவசாயிகளிடம் காப்பீட்டு தொகை பெறாமல் அரசே இத்தொகையை செலுத்த வேண்டும்.மாவட்டத்தில் அறுவடை எந்திரங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. நடவு காலங்களில் உழவு செய்வதற்கு டிராக்டர் கிடைப்பதில்லை. இதற்காக அதிக கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அறுவடை பணிகளுக்கும், உழவு பணிகளுக்கும் ஒரு மணி நேரத்திற்கு எவ்வளவு வாடகை என்பதை அரசே நிர்ணயம் செய்ய வேண்டும்.பாளையங்காலில் அமலை செடிகள் சூழ்ந்து காணப்படுவதால் கடை மடை பகுதி வரை தண்ணீர் செல்வதில்லை. ஆனால் அதிகாரிகள்

அமலைகளை அகற்றி விட்டதாக கூறுகின்றனர். இதில் ஏராளமான அரசு பணம் வீணடிக்கப்பட்டுள்ளது. விவசாய நிலங்கள் பாழாகும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இதுதொடர்பாக வருவாய்த் துறையினர், பொதுப்பணித் துறையினர், வேளாண்மைத் துறையினர், விவசாய சங்க பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழுவினரின் கூட்டாய்வு நடத்தப்பட வேண்டும்.

மணிமுத்தாறு 4 வது ரீச்க்கு உட்பட்ட கால்வாய்களில் கருவேல மரங்கள் முளைத்து தூர்ந்து காணப்படுகிறது. 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை தூர் வாரப்படும் கால்வாய்களில் தற்போது பணிகள் எதுவும் நடக்கவில்லை. தற்போது மழை இல்லாத காரணத்தினால் உரிய நாட்களில் நாற்றுகளை நட முடியாத நிலையில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.குலையநேரி பெரியகுளத்திற்கு கருப்பாநதி பாப்பான் கால்வாய் மூலம் தண்ணீர் பிரச்னையை தீர்க்க வேண்டும். தனிக் கால்வாய் மூலம் இத்திட்டத்திற்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும்.

இவ்வாறு விவசாயிகள் பலர் பேசினர்.இதற்கு பதிலளித்து டி.ஆர்.ஓ ரமண சரஸ்வதி பேசும் போது, ""நெல்லை மாவட்டத்தில் ஷட்டர்கள், மடைகளை சீரமைக்க 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் விரைவில் பணிகள் மேற்கொள்ளப்படும். விவசாயிகளின் கோரிக்கைகள் குறித்து படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.சேரன்மகாதேவி சப்-கலெக்டர் வீரராகவராவ், ஆர்.டி.ஓக்கள் தமிழ் செல்வி, சேதுராமன், பொதுப்பணித் துறை செயற்பெறியாளர்கள் காமராஜ், சம்பத், முன்னோடி பாங்க் மேலாளர் ராமசுப்பு, மின்வாரிய பி.ஆர்.ஓ அந்தோணிராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.விவசாயிகள் சார்பில் கணேசன், மாடசாமி உட்பட பலர் பேசினார்.முன்னதாக, வேளாண்மை இன்ஜினியரிங் துறை மூலம் விவசாயிகளுக்கு டிராக்டர்கள், நெல் அறுவடை எந்திரம் ஆகியவை 6.25 லட்சம் மானிய விலையில் வழங்கப்பட்டது.இதில் வேளாண்மை இன்ஜினியரிங் துறை செயற்பொறியாளர் சந்திரன், உதவி செயற்பொறியாளர் ஆனந்தராஜா, முத்துக்குமாரசாமி, உதவி இன்ஜினியர் ஞான அமிர்தராஜா, அசோக்குமார், ஜான் கிறிஸ்டோபர், ராஜகோபால் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**நெல் பயிரில் உயிரியல் முறையில் நோய்களை கட்டுப்படுத்துதல்.**

பதிவு செய்த நாள் : நவம்பர் 19,2010,01:35 IST

திருநெல்வேலி: வள்ளியூர் வட்டாரத்தில் பிசான நெல் சாகுபடி துவங்கியுள்ளது. நெல் பயிரில் தோன்றும் நோய்களை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த தொழில்நுட்பங்கள் உள்ளன. நோய்களை உண்டுபண்ணும் பூசணங்களை அழிக்கும் இயல்புடைய எதிர்உயிரி பாக்டீரியாவான சூடோமோனாஸ் மண்ணில் பயிர்களின் வேர்ப்பகுதியில் கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன. இதன் அறிவியல் பெயர் சூடோமோனஸ் ப்ளோரசன்ஸ் என்பதாகும்.நன்மை செய்யக்கூடிய பலவிதமான பாக்டீரியாக்களில் சூடோமோனாஸ் மிகவும் சக்திவாய்ந்தது. இது விதையின் மேல்புறம் மற்றும் மண்வழிப் பரவும் நோய்களான வேரழுகல், தூர்வாடல், தண்டழுகல், இலைக்கருகல், குலைநோய், தானியம் நிறம் கெடுதல் போன்ற நோய்களை சிறப்பாக கட்டுப்படுத்துகிறது. உயிரினங்களுக்கு இது தீங்கு விளைவிப்பதில்லை. மேலும் உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ரைசோபியம் ஆகியவற்றுடன் கலந்து பயன்படுத்தும் போது மண்ணில் உள்ள கரிம பொருட்களை பயன்படுத்தி பல மடங்காக பெருக்கி பயிருக்கு நீண்ட கால பாதுகாப்பை தருகின்றது.பயிரில் நோய் எதிர்ப்பு சக்தியை துரிதமாக தூண்டி சிக்கமான முறையில் நோய்களை கட்டுப்படுத்தி பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. இதனால் கணிசமான அளவு மகசூலும் கிடைக்கின்றன. நெல் விதையுடன் நேர்த்தி செய்ய ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் என்ற அளவில் கலக்க வேண்டும். பயிரில் மேல் தெளிக்க ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் சூடோமோனாஸ் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.இவ்விதம் உயிரியல் முறையில் நோய்களை கட்டுப்படுத்தி உயிர்ச்சூழல் விவசாயத்தின் மூலம் உணவு உற்பத்தியை உயர்த்திட வேண்டுமென வள்ளியூர் வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) சத்தியஜோஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ராஜராஜன் 1000 நெல் சாகுபடிதொழில் நுட்ப விழிப்புணர்வு பேரணி

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2010,04:13 IST

தென்காசி:செங்கோட்டையில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி தொழில் நுட்ப விழிப்புணர்வு பேரணி நடந்தது.செங்கோட்டை வட்டார வேளாண்மை அலுவலகம் சார்பில் விவசாயிகள் மத்தியில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி தொழில் நுட்ப முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேரணி நடந்தது. செங்கோட்டை வேளாண்மை அலுவலகம் முன் பேரணி துவங்கியது. பேரணிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர்கள் சுப்பிரமணியன், சுதா, செங்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் காளியப்பன் முன்னிலை வகித்தனர். செங்கோட்டை யூனியன் சேர்மன் சட்டநாதன், நகராட்சி சேர்மன் ரகீம் பேரணியை துவக்கி வைத்தனர்.செங்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் ஆட்டோ, சைக்கிள்களிலும், விவசாயிகள் மொபட், பைக்குகளிலும் பேரணியாக சென்றனர். ராஜராஜன் 1000 நெல் சாகுபடி தொழில் நுட்பம் குறித்து பிரசாரம் செய்யப்பட்டது. பேரணி கொல்லம் ரோடு வழியே புளியரை வரை சென்றது.தொழில் நுட்பங்கள் குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் கூறியதாவது:""ராஜராஜன் 1000 நெல் சாகுபடியில் ஒரு ஏக்கர் நடவு செய்ய ஒரு சென்ட் நாற்றாங்கால் போதும். ஏக்கருக்கு 3 கிலோ விதை போதுமானது. 1 க்கு5 மீட்டர் அளவுள்ள மேட்டு பாத்திகளை அமைத்து இதன் மீது பாலித்தீன் தாள் விரிக்க வேண்டும்.

ஒரு மேடைக்கு 95 கிராம் வீதம் பொடி செய்த டி.ஏ.பி.உரத்தை கலந்து 4 செ.மீ.உயரத்திற்கு பரப்ப வேண்டும். பிறகு முறை கட்டிய விதைகளை நன்கு பரவலாக விதைத்து பூவாளி மூலம் நீர் தெளிக்க வேண்டும்.சுமார் 8 முதல் 14 நாள் வயதுடைய இளம் நாற்றுகளை 25 க்கு25 செ.மீ. இடைவெளியில் ஒரு குத்துக்கு ஒரு நாற்று வீதம் நாற்றின் வேர்கள் "ட' வடிவில் இருக்குமாறு லேசாக நட வேண்டும். இதனால் பயிருக்கு தேவையான சூரிய ஒளி, காற்று மற்றும் சத்துக்கள் தடையின்றி கிடைக்கிறது. நடவு செய்த 10 வது நாள் முதல் 10 நாட்கள் இடைவெளியில் முறை உருளும் களை கருவி கொண்டு களை எடுக்க வேண்டும்.இதனால் களை செடிகள் உரமாகின்றன. களை எடுக்கும் செலவு குறைகிறது. 25 செ.மீ. உயரத்திற்கு நீர் கட்டி பின்னர் நீர் மறைந்து மயிரிழையளவில் வெடிப்புகள் தோன்றும் சமயத்தில் மீண்டும் நீர் பாய்ச்ச வேண்டும்.

அதாவது பாய்ச்சலும், காய்ச்சலும் வேண்டும்" என்றார் வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன்.

தினமணி

## கரும்பு டன்னுக்கு ரூ. 2500 வழங்க வலியுறுத்தல்

First Published : 20 Nov 2010 11:40:01 AM IST

அரியலூர், நவ. 19: அரியலூரில் கரும்பு டன்னுக்கு ரூ. 2500 வழங்க வேண்டும் என கோத்தாரி சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அரியலூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கோத்தாரி சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் சங்க செயற்குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்துக்கு வாரணவாசி ராஜேந்திரன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

விவசாயப் பணிக்கு ஆள்கள் பற்றாக்குறை, வெட்டுக்கூலி, உரம் உள்பட அனைத்து உற்பத்திச் செலவுகளும் உயர்ந்து விட்ட நிலையில், 2010-11 ஆம் ஆண்டு அரவைப் பருவத்துக்கு, தமிழக அரசு அறிவித்துள்ள கரும்பு டன்னுக்கு ரூ. 1900 என்பது மிகவும் குறைவாக உள்ளது. எனவே, விவசாயச் சங்கங்களின் நலனைக் கருதி வெட்டுக்கூலி, வாகன வாடகை இன்றி கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 2500 அறிவிக்க வேண்டும்.

டீசல் விலையைக் கருத்தில் கொண்டு, டிராக்டர் உரிமையாளர்களும் கரும்பு உற்பத்தியாளர்கள் என்பதால் வாகன வாடகையை உயர்த்தி வழங்க வேண்டும்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு கரும்பு வெட்டிய 1 வார காலத்திற்குள் பணம் அளிக்கப்பட்டதை போல, நிகழாண்டும் கரும்பு வெட்டிய 1 வார காலத்துக்குள் பணம் அளிக்க வேண்டும். வெளி ஆலைகளில் இருந்து கரும்பு பெறப்படுவதால், பதிவு செய்யப்பட்ட கரும்பு வெட்டுவதில் காலதாமதத்தை குறைக்க, வெளியில் இருந்து கரும்பு

பெறக்கூடாது. மேலும், பதிவு செய்யப்பட்ட கரும்பை 10 மாதங்கள் முதிர்ச்சி அடைந்தவுடன் வெட்ட வேண்டும்.

கடந்த 2002-03, 2003-04 ஆம் ஆண்டுகளில், நிலுவையில் உள்ள பாக்கித் தொகை ரூ. 3 கோடியை விவசாயிகளுக்கு கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கரும்பு ஆலையில், இணைப்புச் சாலைகள் சீரமைக்காமல் உள்ளது. எனவே, கரும்பு அபிவிருத்தி சாலைகளை ஆலை நிர்வாகம் சீரமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் நிர்வாகிகள் விஜயகுமார், முருகானந்தம், பன்னீர்செல்வம், நல்லியப்பன், அறிவழகன், அய்யாரப்பன், சுந்தரமூர்த்தி, வில்வநாதன், ராஜாசிதம்பரம், ஏசுதாஸ், மணி, துரைராஜ், பிச்சைபிள்ளை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஆறுகளில் கொட்டப்படும் குப்பைகள்: விவசாயிகள் புகார்

First Published : 20 Nov 2010 06:31:57 AM IST

கடலூர், நவ. 19: ஆறுகளில் நகராட்சிக் குப்பைகளைக் கொட்டுவதால் விவசாயம் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

÷கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்கும் கூட்டம், மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.நடராஜன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடந்தது.

÷கூட்டத்தில் விவசாயிகள் தெரிவித்த புகார்கள்:

÷மாவட்ட விவசாய சங்கங்கங்களின் கூட்டமைப்பின் செயலாளர் கார்மாங்குடி வெங்டேசன்: கடலூர், பண்ருட்டி, நெல்லிக்குப்பம் உள்ளிட்ட நகராட்சிகள் கெடிலம் பெண்ணையாறு, மலட்டாறு உள்ளிட்ட ஆறுகளில் குப்பைகளைக் கொட்டி வருகின்றன.

÷இதனால் ஆறுகளும் அருகில் உள்ள நகரங்களும் மாசுபடுகின்றன. அதே நேரத்தில் மழை காலத்தில் இந்த குப்பைகளில் உள்ள பாலித்தீன் பொருள்கள் வாய்க்கால்களில் அடித்துச் செல்லப்பட்டு தண்ணீர் ஓட்டத்தைத் தடை செய்கின்றன. வயல்களுக்கும் பாலிதீன் குப்பைகள் அடித்து வரப்படுகின்றன. இதனால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

÷மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்பின் தலைவர் பி.ரவீந்திரன்: இந்த ஆண்டு டெல்டா பாசனப் பகுதிகளில் தண்ணீர் விநியோகம் சிறப்பாக அமைந்துள்ளது. இதனால் மற்ற மாவட்டங்களைவிட கடலூாரில் முன்னதாக சம்பா நெல் நடவு முடிந்துள்ளது.

÷நகரங்களிலும் கிராமங்களிலும் கால்நடைகள் கட்டுப்பாடு இன்றி அவிழ்த்து விடப்படுகின்றன. இதனால் பயிர்கள் சேதம் அடைகின்றன.

÷கட்டுப்பாடு இன்றி திரியும் கால்நடைகளை பிடித்து அடைக்க, உருவாக்கப்பட்டு இருந்த பட்டிகள் எல்லாம் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டன.

÷மீண்டும் பட்டிகளை உருவாக்க வேண்டும். 100 நாள் வேலைத் திட்டத்தில் வாய்க்கால் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

÷ரூ.5 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டும், வேலை தொடங்காமல் இருக்கும் சிதம்பரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடக் கட்டடத்தை, விரைவில் கட்ட வேண்டும்.

÷விவசாயச் சங்கங்களின் கூட்டமைப்பின் மாவட்டத் தலைவர் வெங்கடபதி: புதிய மின் இணைப்பு பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போதே, 4 நட்சத்திர தகுதி உள்ள நீர் மூழ்கி மோட்டார்களை வாங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடாது. மின் இணைப்பு கொடுக்கும்போது, மோட்டார் பற்றி வலியுறுத்தலாம்.

÷விவசாயிகள் சங்கத் தலைவர் வீரபாண்டியன்: சூறாவளிக் காற்றுடன் தற்போது பெய்து வரும் கனமழையால் கடலூர் மாவட்டத்தில், வாழை மரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளன. பாதிப்புகள் குறித்து கணக்கெடுப்பு நடத்தி நிவாரணம் வழங்க வேண்டும்.

÷பெண்ணாடம் முருகன்குடி விவசாயி பரமானந்தம்: பெண்ணாடம் பகுதியில் வேளாண் விரிவாக்க மையக் கிடங்கில் வாங்கி விதைத்த சாவித்திரி ரகம் நெல், 6 மாதத்தில் கதிர் வரவேண்டியது, இரண்டரை மாதத்திலேயே கதிர் வந்துள்ளது.

÷40 ஏக்கரில் இத்தகைய பாதிப்பு உள்ளது. இதனால் மகசூல் பாதிக்கும் அபாயம் உள்ளது. (பாதிக்கப்பட்ட நெல் பயிரையும் கூட்டத்துக்குக் கொண்டு வந்து காண்பித்தார்).

÷வெலிங்டன் ஏரி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் பெண்ணாடம் சோமசுந்தரம்:

÷பெண்ணாடாம் ரயில்வே மேம்பாலக் கட்டுமானப் பணிகளுக்காக, வெலிங்டன் ஏரியின் பாசன வாய்க்கால் மூடப்பட்டு கிடக்கிறது.

÷பாசன வாய்க்காலில் இடிபாடுகள் கொட்டப்பட்டு உள்ளன. இதனால் 70 ஏக்கர் விளை நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. பெண்ணாடம் சர்க்கரை ஆலை அறிவித்த சலுகைகளை, வாக்குறுதிப்படி விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

## 20 விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள்

First Published : 20 Nov 2010 07:14:54 AM IST

தருமபுரி, நவ.19: தருமபுரி மாவட்டத்தில் 20 விவசாயிகளுக்கு ரூ.26 லட்சம் மதிப்பிலான வேளாண் இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கப்பட்டன.

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆட்சியர் இரா.ஆனந்தகுமார் இந்த இயந்திரங்களை ஒப்படைத்தார்.

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வேளாண் பொறியியல் துறை சார்பில் டிராக்டர், பவர் டிரில்லர், கதிரடிக்கும் இயந்திரம், நெல் அறுவடை இயந்திரம், தீவனப்புல் வெட்டும் இயந்திரம், களை எடுக்கும் இயந்திரம், ரோட்டோவேட்டர் உள்ளிட்ட இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இம்மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்களை வழங்க மொத்தம் ரூ.81.85 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் முதல்கட்டமாக 20 விவசாயிகளுக்கு ரூ.26.12 லட்சம் மதிப்பிலான இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் மானியத் தொகையின் மொத்த மதிப்பு ரூ.5.87 லட்சமாகும்.

## மரப்பாசம் கடத்தல்: விவசாயிக்கு ரூ.15 ஆயிரம் அபராதம்

First Published : 20 Nov 2010 06:53:27 AM IST

சத்தியமங்கலம், நவ. 19: ஈரோடு மாவட்டம், ஆசனூர் அருகே மரப்பாசம் கடத்திய விவசாயிக்கு ரூ.15 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

சத்தியமங்கலம் ஆசனூர் வனப் பகுதியில், குற்றத் தடுப்பு பணிக்காக ஆசனூர் வனச்சரக அலுவலர் எஸ்.சண்முகம் தலைமையிலான வனத்துறையினர், வெள்ளிக்கிழமை ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, கெத்தேசால் என்ற இடத்தில், புதர் மறைவில் மறைந்திருந்த நபரைப் பிடித்து விசாரித்தபோது, அங்கு நான்கு மரப்பாச மூட்டைகளை அவர் பதுக்கி வைத்திருந்தது தெரிய வந்தது.

இது தொடர்பாக அதே கிராமத்தைச் சேர்ந்த குருசித்தன் (45) என்பவரைக் கைது செய்த வனத்துறையினர், மரப்பாச மூட்டைகளைக் கைப்பற்றினர்.

இவ்வழக்கை விசாரித்த மாவட்ட வன அலுவலர் சதீஷ், குருசித்தனுக்கு ரூ.15 ஆயிரம் அபராதம் விதித்து உத்திரவிட்டார்.

கடத்தல் குறித்து வனச்சரகர் எஸ்.சண்முகம் கூறுகையில், கெத்தேசால் செட்டில்மென்ட் பகுதியில் சேகரிக்கப்பட்ட மரப்பாசம், ஒரு வகை உணவுப் பொருளாகும். பிரியாணி மற்றும் மசாலா உணவுகளுக்கு மரப்பாசத்தை பயன்படுத்துகின்றனர். இப்பகுதியில் வனக் குற்றங்களில் ஈடுபடும் நபர்கள் மீது, கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## பணப் பயிர் ஏற்றுமதியை தடை செய்யக் கூடாது: கொங்கு வேளாளர் கவுண்டர்கள் பேரவை

First Published : 20 Nov 2010 06:51:22 AM IST

கோபி, நவ. 19: பணப் பயிர் ஏற்றுமதியை தடை செய்யக் கூடாது என்று கொங்கு வேளாளர் கவுண்டர்கள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

பேரவையின் கோபி ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டம், கோபி அருகே உள்ள கடுக்காம்பாளையத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. பேரவை நகரத் தலைவர் சண்முகம் தலைமை வகித்தார்.

உணவுப் பொருள்களைத் தவிர, மற்ற பணப் பயிர்களின் ஏற்றுமதியை தடை செய்யக் கூடாது. இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்படும் விவசாயப் பயிர்கள் மற்றும் கிணறுகளில் வைக்கப்படும் மின் மோட்டார்களுக்கு, உடனடியாக இழப்பீடு வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பேரவையின் ஈரோடு வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் துரைசாமி, சாமிநாதன், கோபி நகர கெப் ரவத் தலைவர் அப்புச்சாமி, நம்பியூர் ஒன்றிய அமைப்பாளர் வெள்ளியங்கிரி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## உதவி வேளாண் அலுவலர்களை பணி வரன்முறை செய்யக் கோரிக்கை

First Published : 20 Nov 2010 11:33:08 AM IST

கரூர், நவ.19: உதவி வேளாண் அலுவலர்களைப் பணி வரன்முறை செய்ய வேண்டும் என தமிழ்நாடு உதவி வேளாண் அலுவலர்கள் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு உதவி வேளாண் அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் அண்மையில் நடைபெற்ற கரூர் மாவட்ட செயற்குழு கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் மு.சிவபிரகாசம் தலைமை வகித்தார்.

துணைத் தலைவர் எஸ். ராஜேந்திரன், இணைச் செயலர் ரத்தினவேலு, தணிக்கையாளர் செ.தி. செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயலர் கே. முத்துக்காமாட்சி தீர்மானங்களை நிறைவேற்றினார்.

கூட்டத்தில், கரூர் மாவட்டத்தில் புதிதாகப் பணி நியமனம் செய்யப்பட்ட உதவி வேளாண் அலுவலர்களைப் பணி வரன்முறை செய்ய வேண்டும், ஊழியர்களுக்கு பயணப்பட்டியல்கள் வழங்குவதில் மாவட்ட நிர்வாகத்தின் ஊழியர்களுக்கு எதிரான போக்கை வன்மையாகக் கண்டிப்பது, உதவி வேளாண் அலுவலர்களைத் தரக் குறைவாக நடத்தும் வேளாண் உதவி இயக்குநர்மீது உரிய நடவடிக்கை தேவை,

வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் வருகைப் பதிவேட்டால் அதிக தொலைவு சென்றும் பயணப்படி மறுக்கப்படுகிறது. எனவே, உதவி வேளாண் அலுவலர்களின் பயண எல்லை எதுவரை என்பதை வரையறை செய்ய வேண்டும்.

அரசின் மானியத் திட்டங்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கும் பணியை உதவி வேளாண் அலுவலர்கள் செய்கின்றனர். தற்பொழுது மானியத் திட்டங்கள், இடுபொருள்கள் ஆகியவற்றை வழங்கும்போது செல்போன் எண் கண்டிப்பாகப் குறிப்பிட வேண்டும், குடும்ப அட்டை ஒளிநகல் பரிந்துரை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்ற வாய்மொழி உத்தரவையும் ரத்து செய்ய வேண்டும்.

அரசு வழங்கும் பணப்பலனை இழந்துவரும் நிலையைக் கண்டித்து கரூர் மாவட்டத்தில் பணிபுரியும் அனைத்து துணை வேளாண் அலுவலர்கள், உதவி விதை அலுவலர்கள், உதவி வேளாண் அலுவலர்கள் ஆகியோர் டிசம்பரில் ஒட்டுமொத்தமாக சிறுவிடுப்பு எடுப்பது, வேளாண் இணை இயக்குநர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் கூட்டம்

First Published : 20 Nov 2010 11:32:10 AM IST

கரூர், நவ.19: புகழூர் சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் நலச் சங்கக் கூட்டம் வேலாயுதம்பாளையத்தில் அண்மையில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் இரா. பழநிச்சாமி தலைமை வகித்தார். நிர்வாகிகள் ஏ. காளியண்ணன், வேட்டமங்கலம் சந்திரசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், கரும்பு டன்னுக்கு ஆரம்ப விலையாக ரூ. 2 ஆயிரத்தை உடனடியாக அறிவிக்க வேண்டும். ஆலையை உரிய காலத்தில் தொடங்க வேண்டும். விவசாயிகளின் பிரச்னையை மத்திய, மாநில அரசுகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் வகையில் கரூரில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறேவைற்றப்பட்டன.

கூட்டத்தில் சங்கச் செயலர் பெ. கதிர்வேல், துணைத் தலைவர் மா. சாமியப்பன், பொருளாளர் கு.க. பழனிச்சாமி, துணைச் செயலர் க. செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தொடர் மழையால் வைக்கோல் விலை வீழ்ச்சி

எஸ்.கே.ரவி.

First Published : 19 Nov 2010 12:04:38 PM IST

கிருஷ்ணகிரி, நவ. 18: கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் தொடர் மழையால் வைக்கோல் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காவேரிப்பட்டணம், ஆவத்துவாடி, பையூர், அவதானப்பட்டி, பெரியமுத்தூர், காவேஅள்ளி, மிட்டஅள்ளி, சுண்டேகுப்பம், அரசம்பட்டி, திம்மாபுரம்,

மூங்கில்புதூர், செம்மண்டகுப்பம், மாதேப்பட்டு உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 21,750 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

நெல் அறுவடைக்கு பின்னர் பதப்படுத்தப்பட்ட வைக்கோல்கால்நடைகளுக்கு தீவனமாக வழங்கப்படுகிறது. குறிப்பாக மேட்டுப்பகுதிகளான ஊத்தங்கரை, மத்தூர், வேப்பனப்பள்ளி, ராயக்கோட்டை மற்றும் தருமபுரி மாவட்டத்தில் பென்னாகரம், பாப்பாரப்பட்டி, மொரப்பூர் போன்ற பகுதிகளில் வசிக்கும் விவசாயிகள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிடைக்கும் வைக்கோலை கால்நடைகளுக்காக வாங்கிச் செல்கின்றனர்.

கடந்த ஆண்டு மழை பொய்த்துவிட்டதால் கால்நடை தீவனத்தின் விலை அதிகரித்தது. ஒரு டிராக்டர் வைக்கோல் ரூ. 4 ஆயிரம் வரை விற்கப்பட்டது.

இதன் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைத்தது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் சாராசரி மழையளவு 830.5 மில்லி மீட்டர். நிகழாண்டில் இதுவரை 923.33 மி.மீ. மழை பெய்துள்ளது. மேலும் கடந்த சில நாள்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் அறுவடை செய்த நெற்பயிரை வெயிலில் உலர்த்தும் பணியும் பாதிக்கப்படுள்ளது.

மேலும் மேட்டு நிலங்களிலும் பரவலாக மழை பெய்துள்ளதால், வயல்காட்டில் அதிகமாக புற்கள் முளைத்துள்ளன. இதனால் கால்நடைக்கு தீவனமாக பயன்படும் வைக்கோலின் தேவை குறைந்துள்ளது. தற்போது ஒரு டிராக்டர் வைக்கோல் விலை ரூ. 600-க்கும் குறைவாகவே விற்கப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

விலையேற வாய்ப்பு

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் கா.ராஜன் கூறியது:

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் வைக்கோலுக்கான தேவை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. வைக்கோலை நல்ல வெயிலில் உலர்த்தி, இருப்பு வைத்தால் அதிக லாபத்தில் விற்க முடியும். மேலும், மாம்பழ கூழ் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் மாங்காய்களை இயற்கையாக பழுக்க வைக்க வைக்கோல் தேவை அதிகரிக்கும். அப்போது நல்ல விலை கிடைக்கும் என்றார்.

## ராமநாதபுரத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

First Published : 20 Nov 2010 11:17:06 AM IST

ராமநாதபுரம், நவ. 19: இம்மாதம் 30-ம் தேதி ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் த.ந.ஹரிஹரன் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் காலை 10 மணிக்கு நடைபெறும் என ஆட்சியர் அலுவலகம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளும், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும் தவறாது கலந்து கொண்டு வேளாண்மை சம்பந்தமான பொருள்கள் பற்றி மட்டுமே விவாதிக்குமாறும் ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 25-க்குள் கரியகோயில் அணையை திறக்க விவசாயிகள் வலியுறுத்தல்

First Published : 20 Nov 2010 07:34:28 AM IST

சேலம், நவ. 19: சேலம் கருமந்துறையில் உள்ள கரியகோயில் அணையை வரும் 25-ம் தேதிக்குள் பாசனத்துக்காகத் திறக்க வேண்டும் என்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற குறை தீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

÷இக்கூட்டத்திற்கு மாவட்ட வருவாய் அலுவலர் கலை அரசி தலைமை தாங்கினார். இதில் பனைமரத்துப்பட்டி விவசாயி சண்முகம் பேசியது:

÷100 ஆண்டுகள் பழமை வாய்ந்த பனைமரத்துப்பட்டி ஏரி இருந்தும் எங்கள் பகுதிக்கு தண்ணீர் கிடைப்பது இல்லை. இருப்பினும் எங்களிடம் நன்செய் நிலத்துக்கான வரி வசூலிக்கப்படுகிறது. இதை புன்செய் நிலமாக கருதி வரி வசூலித்தால் இப்பகுதி விவசாயிகள் பயனடைவார்கள்.

÷ராஜராஜன் 1000 நெல் சாகுபடி முறையின் தொழில்நுட்பம் விவசாயிகளுக்கு சரியாகப் புரியவில்லை. இந்த முறையில் நெல் நடவு செய்வதற்கும் கூலி அதிகமாகக் கேட்கின்றனர். எனவே இதற்காகப் புதிய நடவு இயந்திரம் கண்டுபிடிக்க வேண்டும் என்றார்.

÷அம்மம்பாளையம் விவசாயி கோவிந்தராஜன் பேசுகையில்,""சேலம் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்த போதிலும், ஆத்தூரில் ஓரளவுக்குத்தான் பெய்துள்ளது. எனவே கருமந்துறை கரியகோயில் அணையையும், வாழப்பாடி ஆணை மடுவு அணையையும்

பாசனத்துக்காக திறக்க வேண்டும். இதன் மூலம் ஏத்தாப்பூர், பெத்தநாயக்கன்பாளையம் சுற்றுப்பகுதி விவசாயிகள் பயன் பெறுவார்கள். மரவள்ளியைத் தாக்கும் வெள்ளைப் பூச்சியைக் கட்டுப்படுத்த விடப்பட்ட ஒட்டுண்ணி மழையால் அழிந்துவிட்டது. அவற்றை மீண்டும் வயலில் விட வேண்டும்,"என்றார். வரும் 25 ம் தேதிக்குள் கரியகோயில் அணையைத் திறக்க வேண்டும் என்ற கோரிக்கையை மேலும் சில விவசாயிகளும் வலியுறுத்தினர்.

சங்ககிரி பகுதியில் பெய்யும் தொடர் மழையால் மஞ்சள், மரவள்ளி பயிர்கள் அழுகும் நிலையில் உள்ளதாகவும், இவற்றுக்கு உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சங்ககிரி விவசாயி செந்தில்குமார் வலியுறுத்தினார். மேட்டூரில் தண்ணீர் திறக்கும் சமயத்தில் கிழக்கு, மேற்குக் கால்வாயிலும் தண்ணீர் திறக்க அவர் வலியுறுத்தினார்.

÷தமிழக விவசாயிகள் சங்கத்தின் சுந்தரம், மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்திருந்தவர்கள் பதிவு செய்வதற்கான கடைசி தேதியை டிசம்பர் 3 ல் இருந்து அடுத்த ஆண்டு மார்ச் வரை நீட்டிப்பு செய்யக் கோரினார்.

மரவள்ளி முத்தரப்பு கூட்டம்: கூட்டத்தில் ஆத்தூர் விவசாயி கோவிந்தராஜன் பேசியதாவது:

÷மரவள்ளி முத்தரப்புக் கூட்டம் நடத்த வேண்டும் என்று பலமுறை மாவட்ட நிர்வாகத்துக்குக் கோரிக்கை விடுத்தும் கூட்டத்துக்கான ஏற்பாடுகள் நடைபெறவில்லை. இதனால் தனியார் ஆலைகளுக்கு அரசு உதவியாக இருக்கிறதோ என்ற சந்தேகம் மரவள்ளி விவசாயிகளிடையே எழுந்துள்ளது. மரவள்ளி அறுவடை நேரமான ஜனவரியில் கூட்டம் போட்டு விலை நிர்ணயம் செய்வதால் விவசாயிகளுக்கு எந்த லாபமும் ஏற்படாது என்றார்.

÷கூட்டத்தில பிற விவசாயிகள் பேசியது: சேலம் மாவட்டத்தில் அதிகளவில் காய்கறி விளைச்சல் உள்ளது. சிறிய அளவில் உற்பத்தி செய்யும் விவசாயிகள் அருகில் உள்ள உழவர் சந்தைகளில் விற்பனை செய்கின்றனர்.

ஆனால் பெரிய விவசாயிகளுக்கு அங்கு நல்ல விலை கிடைப்பதில்லை. எனவே சேலத்தில் காய்கறி விற்பனைக்கு என்று தனியாக மார்க்கெட் கட்டித் தர வேண்டும்.

÷வேடப்பட்டி பகுதியில் திருமணி முத்தாற்றில் அதிகளவில் வெள்ளம் செல்கிறது. ஆனால் அங்கிருந்து வெறும் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேடப்பட்டி ஏரி வறண்டு கிடக்கிறது. திருமணி முத்தாற்றின் நீர் கன்னங்குறிச்சி ஏரியில் சென்று சேருவதால் எந்த விவசாயிக்கும் நன்மை கிடைப்பதில்லை. எனவே வேடப்பட்டி ஏரியிலும் பிற ஏரிகளிலும்

திருமணி முத்தாற்றின் நீரைச் சேமிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

÷மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செங்கோட்டுவேலு, வேளாண்மை இணை இயக்குநர் உதயகுமார் உள்ளிட்ட அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## பூச்சிக் கொல்லி பயன்பாடு தமிழக விவசாயிகளைக் கண்டித்து ஐ.என்.டி.யு.சி. ஆர்ப்பாட்டம்

First Published : 19 Nov 2010 10:40:44 AM IST

கம்பம், நவ. 18:கேரளப் பகுதியில் சாகுபடி மேற்கொள்ளும் தமிழக விவசாயிகள், தடை செய்யப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்தைப் பயிர்களுக்குப் பயன்படுத்துவதை கண்டித்து ஐ.என்.டி.யு.சி அமைப்பின் சார்பில் வியாழக்கிழமை குமுளியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தேனி மாவட்டம் கம்பம், கூடலூர், உத்தமபாளையம், காமயகவுண்டன்பட்டி, புதுப்பட்டி, கோம்பை, தேவாரம், பண்ணைப்புரம், சுருளிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் புளியமலை, ஆனைவிலாசம், கல்தொட்டி, வண்டன்மேடு, மாலி, சாத்தான்ஓடை, பூப்பாறை, புத்தடி, கட்டப்பனை, நெடுங்கண்டம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 75 ஆயிரம் ஏக்கரில் ஏலம், மிளகு, காப்பி உள்ளிட்ட பயிர் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கேரளத்தில் கடந்த 7 ஆண்டுகளுக்கு மேலாக என்டோசல்பான் என்ற பூச்சிக் கொல்லி மருந்தைப் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழகத்தில் என்டோசல்பான் மருந்துக்கு தடை இல்லாததால், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், கேரளத்தில் அதிகளவில் இப்பூச்சிக் கொல்லி மருந்தை தடையை மீறிப் பயன்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.என்டோசல்பானை பயன்படுத்தும் தமிழக விவசாயிகளைக் கண்டித்தும், இதைத் தடுக்காமல் உள்ள கேரள சோதனைச் சாவடிப் பொறுப்பாளர்களைக் கண்டித்தும் ஐ.என்.டி.யு.சி. அமைப்பின் சார்பில் குமுளியில் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அகில இந்திய

பிளான்டேசன் காங்கிரஸ் தலைவர் பி.ஏ.ஜோசப் தலைமையில் 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## திராட்சை விவசாயிகள் ஒருங்கிணைப்பு கூட்டம்

First Published : 19 Nov 2010 10:40:52 AM IST

தேனி, நவ. 18:காமயகவுண்டன்பட்டியில் திராட்சை விவசாயிகளின் ஒருங்கிணைப்புக் கூட்டம் நவ. 20-ம் தேதி நடைபெற உள்ளது.

இது குறித்து கம்பம் தோட்டக் கலைத் துறை பணியாளர்கள் கூறியதாவது:கம்பம் பள்ளத்தாக்கு திராட்சை விவசாயிகள் ஒருங்கிணைப்புக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் பூ.முத்துவீரன் தலைமையில் நவ. 20-ம் தேதி நடைபெற உள்ளது. இதில் விவசாயப் பல்கலைக்கழக துணை வேந்தர் முருகேசபூபதி, வேளாண்மை விற்பனை வாரியத் தலைவர் டி.கணேசன், கம்பம் சட்டப் பேரவை உறுப்பினர் என்.ராமகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் திராட்சை சாகுபடி தொழில்நுட்பம், புதிய ரகங்கள், தற்போதுள்ள சாகுபடி முறையில் தரம் உயர்த்துதல் உள்ளிட்டவை குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்படும். மேலும், காமயகவுண்டன்பட்டியில் ரூ. 2 கோடி மதிப்பில் அமைய உள்ள திராட்சை ஏல மையம் குறித்து விவசாயிகளிடம் கருத்துக் கேட்கப்படும் என்றனர்.

## நெல் நாற்று நடவு இயந்திரத்தால் குறைந்த செலவில் அதிக மகசூல்: கூட்டுறவு அதிகாரி தகவல்

First Published : 20 Nov 2010 07:52:09 AM IST

வந்தவாசி, நவ. 19: நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம் மூலம் குறைந்த செலவில் அதிக மகசூல் பெறலாம் என்று திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ச.சுப்பிரமணியன் கூறினார்.

வந்தவாசியை அடுத்த தெய்யார் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் ரூ.|9.54 லட்சத்தில் நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம் வாங்கப்பட்டுள்ளது. வாடகைக்கு வழங்கப்பட உள்ள இந்த இயந்திரத்தின் செயல்விளக்கம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில், ச.சுப்பிரமணியன் பேசியது:

இந்த இயந்திரம் மூலம் விவசாயிகள் நவீன தொழில்நுட்ப முறையில் நாற்று நடவு செய்யலாம்.

இந்த இயந்திரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் ஆள்பற்றாக்குறை பிரச்னை ஏற்படாது. இதனால், ஒரே சீராக இடைவெளிவிட்டு நடவு செய்வதால் பயிர்களுக்கு காற்றோட்டம் அதிகம் கிடைக்கிறது. இதனால் பயிர் நன்றாக வளரும். இதனால் மகசூல் அதிகமாக கிடைக்கும். இந்த இயந்திரம் கூட்டுறவு கடன் சங்கம் மூலம் வாடகைக்கு வழங்கப்படும்.

விவசாயிகளே நாற்று தயார் செய்து வைத்தால் ஒரு ஏக்கருக்கு நாற்று நடவு செய்ய ரூ.1,600 வாடகை வசூலிக்கப்படும். ஆனால், நாற்று தயார் செய்வது, நடவு செய்வது ஆகிய அனைத்துமே கூட்டுறவு கடன் சங்கமே செய்ய வேண்டும் என்றால் ஒரு ஏக்கருக்கு ரூ.3,600 வசூலிக்கப்படும்.

இந்த இயந்திரம் மூலம் நாற்று நடவு செய்தால் அதிக களைகள் வளராது. ஒரு நாளில் சுமார் 15 ஏக்கர் வரை நாற்று நடவு செய்யலாம். இந்த இயந்திரத்தை விவசாயிகள் சொந்தமாக வாங்க வேண்டும் என்றால் ரூ.4 லட்சம் மானியத்தில் வாங்கலாம் என்றார்.

வருஷப்பிரியா அக்ரோடெக் பிரைவேட் லிமிடெட் கிளை மேலாளர் கே.பி.கிருஷ்ணன், சரக துணைப்பதிவாளர் மனோகரன், சங்கத்தின் தனி அலுவலர் கே.ஜெயபால், சங்க செயலர் ஆ.உதயகுமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## உழவர் மன்றங்கள் தொடக்கம்

First Published : 20 Nov 2010 08:00:58 AM IST

ஆரணி, நவ. 19: ஆரணியில் உழவர் மன்றங்கள் வெள்ளிக்கிழமை தொடங்கப்பட்டன.

கனரா வங்கி, நபார்டு வங்கி இணைந்து மேற்குஆரணி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் வெள்ளிக்கிழமை இவ்விழாவை நடத்தின.

விழாவுக்கு கனரா வங்கி துணை பொதுமேலாளர் எஸ்.சேகரன் தலைமை தாங்கினார். முதுநிலை மேலாளர் எஸ்.வைரமணி வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சங்கீதவாடி, தச்சாம்பாடி, புனலப்பாடி, மெய்யூர், வெள்ளேரி, லாடவரம், கொசப்பாளையம் ஆகிய 7 இடங்களில் உழவர் மன்றங்கள் துவக்கப்பட்டன. இதையடுத்து, கனரா வங்கி நிறுவனர் அம்மேம்பால் சுப்பாராவ்பாயின் 105-வது ஆண்டு விழாவையொட்டி 105 பயனாளிகளுக்கு ரூ.30 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

வேளாண்மை கடன் பிரிவு முதுநிலை மேலாளர் பி.சசிதரன், நபார்டு உதவி பொதுமேலாளர் எஸ்.நாராயணன், உதவி வேளாண்மை இயக்குநர் ஏ.டி.செல்வராஜ், கனரா வங்கி அலுவலர் ஜி.சண்முகம், கீழ்நகர் அன்னை தெரஸ ô தொண்டு நிறுவன நிர்வாகி கே.சி.பலராமன், வேளாண்மை விரிவாக்க அலுவலர் ஆர்.லோகநாதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## முள்ளில்லா மூங்கிலுக்கு பதில் முள் மூங்கில் விநியோகம்

First Published : 20 Nov 2010 06:05:55 AM IST

விழுப்புரம், நவ. 19: முள்ளில்லா மூங்கில் என்று கூறி முள் உள்ள மூங்கில் கன்றுகளை வழங்கியுள்ளனர் என்று விவசாயிகள் குறைகேட்பு கூட்டத்தில் விவசாயி புகார் செய்தார்.

÷மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ந.வெங்கடாசலம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விவசாயிகள் கூறியது:

÷மாதம் ஒருமுறை நடைபெறும் இக் கூட்டத்தில் ஆட்சியர் கலந்து கொள்ளாமல் புறக்கணிப்பது நல்லதல்ல. முக்கியத் துறை அலுவலர்கள் யாரும் கலந்து கொள்ளாதது கண்டிக்கத்தக்கது.

÷"முள்ளில்லா மூங்கில் என்று முள் உள்ள மூங்கிலை தோட்டக் கலைத்துறை அலுவலர்கள் எனக்கு விநியோகித்துள்ளனர்' என்று சின்னகுப்பத்தைச் சேர்ந்த விவசாயி பழனி தெரிவித்ததுடன், அந்த கன்றை கூட்டத்தில் காட்டினார். 7 ஏக்கரில் 2 லட்சம் செலவிட்டு 10 மாதம் வளர்த்தபிறகுதான் தெரிந்தது. நான் என்ன செய்வது என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு அந்த கன்றுகளை மாற்றித்தருவதாக தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

÷மலட்டாற்றில் தற்போது தண்ணீர் வருகிறது. ஆனால் முள் புதர்களை தூர்வாராததால் ஏற்பட்ட அடைப்பு காரணமாக கரை உடைப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தனர். இதற்கு பதிலளித்த பொதுப்பணித்துறை அலுவலர், "தாற்காலிகமாக அதை சரி செய்யலாம், நிரந்தரத் தீர்வுக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது' என்றார்.

÷திருக்கோவிலூர் பகுதியில் 24 மணி நேரமும் மணல் எடுக்கப்படுகிறது. இதனால் லாரிகளின் இயக்க சத்தத்தால் இரவில் கூட தூங்க முடியவில்லை. இதற்கு முடிவே இல்லையா, ஒன்று பகலில் மணல் எடுங்கள், இல்லையேல் இரவில் மணல் எடுங்கள் என்றனர். அதற்கு பதிலளித்த மாவட்ட வருவாய் அலுவலர், "இனி மாலை 6 மணிக்கு மேல் மணல் அள்ள எந்த குவாரியிலும் அனுமதிக்க வேண்டாம்' என்று உத்தரவிட்டார்.